# 33 வது ஆண்டறிக்கை

## 2022-2023



ஏழைகளின் அருட்காவல்
திருத்தந்தை **பிரான்சிஸ்**



எளியோரின் ஓங்கியகுரல்
ஆயர் **நீதிநாதன்**
ஆண்டகை

## எளியோரின் ஏற்றத்தில்...



## இறை மகிமை காண்கிறோம்....

## இயக்குநர் உரை:



**அன்பான அருட்தந்தையர்களே! அருட்சகோதரிகளே! அருட்சகோதரர்களே! நண்பர்களே! இலக்கு மக்களே! மற்றும் உபகாரிகளே அனைவருக்கும் வணக்கம்.**

நாம் வணங்கும், வழிபடும், வாழும், நம்பும் இறைவர் ஓரங்களின் இறைவர் ஆவார். (The Lord of the Peripheries) திருமறை நமக்கு சுட்டிக்காட்டும் இறைவரும் ஓரங்களின் இறைவராக, ஓரங்களில் வாழத் தள்ளப்பட்டவர்களின் இறைவராக இருக்கிறார். இவர் ஓர் வரலாற்று இறைவர். வரலாறு நெடுகிலும் ஓரங்களில் புறம்பே ஒதுக்கித் தள்ளப்பட்டவர்களுக்கு துணைநிற்க, இவர்கள் சார்பாக நிலைப்பாடு எடுத்த இறைவர். நீதியையும், நேர்மையையும், இரக்கத்தையும் அன்பையும் தம் பிள்ளைகளுக்கு குறைவின்றி கொடுக்கும் இறைவர். அநீதிகளையும், அக்கிரமங்களையும், கண்டு பதிலளிக்கும் இறைவர். எல்லோரும் எல்லாமும் பெற்று நிறைவாழ்வு வாழ எல்லோருக்குமான ஓர் அழகிய உலகத்தை படைத்த இறைவர். ஆனால் இன்றைக்கு எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கப் பெற முடியாத ஒரு சூழல். மையங்களில் உள்ளவர்கள் மட்டும் அனைத்தையும் அனுபவித்துக்கொண்டு விளிம்பு நிலையில் உள்ளவர்களை தொடர்ந்து அனைத்து நிலைகளிலும் ஓரங்கட்டும் ஓர் அவலநிலை. திருவிவிலியத்தில் பழைய ஏற்பாட்டில் தொடக்கநூல்: 46:33-34 பகுதியை தியானிக்கும்போது அடிமைகளாகவும், அருவெருப்பானவர் களாகவும், ஓரந்தள்ளப்பட்டவர்களாகவும், ஒதுக்கப்பட்டவர்களாகவும் கருதப்பட்ட எபிரேயர்களை அதாவது இஸ்ரயேலரை தம் சொந்த மக்களாக தேர்ந்தெடுத்துக்கொண்டார் கடவுள். எப்போதும் துன்புறும் மக்களோடும் போராடும் மக்களோடும், ஓரந்தள்ளப்பட்ட மக்களோடும் துணைநிற்கின்ற கடவுளாக இருக்கிறார் நம் இறைவர். ஆமோஸ் 3:2-ல் "உலகத்தில் உள்ள எல்லா மக்களினங்களுக்குள்ளும் உங்களைத்தான் நான் சிறப்பாக தேர்ந்துக்கொண்டேன்" என்கிறார் கடவுள். இக்கூற்றை நாம் கூர்ந்து நோக்கும்போது கடவுள் எப்போதும் சமூகத்தின் ஓரத்தில் ஓரங்கட்டப்பட்ட கடவுளாக, ஒதுக்கப்பட்ட கடவுளாக, ஒதுக்குபுறமாக வாழுகின்ற மக்களோடு வாழும் கடவுளாக இருக்கிறார் என்பது நன்கு நமக்கு புலப்படும்.

புதிய ஏற்பாடு முழுவதும் நம் அண்டவராகிய இயேசுவை ஓரங்களின் ஆண்டவராகவே நாம் காணலாம். அவர் ஓரங்கட்டப்பட்ட கலிலேயாவின் நாட்டுப்புறங்களில் வளர்ந்தவர் (யோவா 7:52). கலிலேயாவின் நாட்டுப் புற மக்களுக்காகவே தமது பணிக்காலத்தில் 95 விழுக்காட்டினை செலவு செய்தவர். அவர் நகர்புறத்தின் ஊழியராக இல்லாமல் கிராமப்புற ஊழியராகவே வாழ்ந்தார். ஆண்டவர் இயேசுவால் சந்திக்கப்பட்டவர்களும் சுகம் அளிக்கப் பெற்றவர்களும் ஓரங்கட்டப்பட்டவர்களே! இயேசு நலம் அளித்த தொழுநோயாளிகள் அத்தனைப்பேரும் ஊருக்கு வெளியே ஓரங்கட்டப்பட்டவர்கள்தான் என்பதை நாம் நன்கறிவோம். இயேசு சுகம் அளித்தவர்களுள் பலர் பெண்கள் என்பது நாம் அறிந்ததே. அவர் நகர்புறத்தின் ஊழியராக இல்லாமல் கிராமப்புற ஊழியராகவே வாழ்ந்தார். ஆண்டவர் இயேசுவால் சந்திக்கப்பட்டவர்களும், சுகம் அளிக்கப் பெற்றவர்களும் ஓரங்கட்டப்பட்டவர்களே! அவர் ஆயக்காரர்களுடனும், பாவிகளுடனும் உணவு அருந்தினார் என்பதும், அவர் களுடைய நண்பனாக குற்றம் சாட்டப்பட்டார் என்பதும் நாம் அறிந்ததே (லூக்கா15:1-2). இதுவும் இவர் ஓரங்களின் அண்டவர் என்பதற்குரிய சான்றாகும். ஆண்டவர் இயேசுவோடு தொடர்புடைய மற்றொரு நிகழ்ச்சியும் நம் செம்பொருளுக்கு பொருத்தமானதாகும். நான்காம் நற்செய்தி நூலில் இயேசுவின் திருப்பணி புறந்தள்ளப்பட்டோருக்கு மிகவும் தொடர்புடையது என்பதை நாம் நன்கறிவோம். யோவான் ஐந்தாம் பிரிவில் வரும் பெத்சாய்தா குளத்தின் அருகில் நடந்த ஓர் நிகழ்வில் இயேசு எருசலேமுக்கு ஒரு திருவிழாவிற்காக செல்கிறார். திருவிழாவின் தலையாய சிறப்பிடம் பெறுவது திருகோயிலாகும்.

ஆனால் இயேசு திருக்கோயிலுக்கு போகாமல் கோயிலின் ஓரத்திற்கு போகிறார். அங்கே பெத்சாய்தா குளத்தருகில் பலர் படுத்திருந்தார்கள் எனப் பார்க்கிறோம். பிறகு ஏன் அந்த 38 ஆண்டுகள் நோயுடன் இருந்தவரை ஆண்டவர் தெரிந்தெடுத்தார்?

இயேசு அவரைக்கண்டு, நெடுங்காலமாக அவர் அந்நிலையில் இருந்துள்ளதை அறிந்து நலம்பெற விரும்புகிறீர்களா? என்று கேட்டார் (யோ5:6). ஏனெனில், அவரே அங்கிருந்தவர்களில் கூடுதல் துன்பப்பட்டவர். ஓரங்கட்டப்பட்டவர்களிலே கூடுதலாக ஓரங்கட்டப்பட்டவர். இன்று எல்லோருக்கும் துன்பங்கள் உண்டு. இன்று பலர் ஓரங்களிலே தள்ளப்பட்டவர்கள். அனால் அவர்களில் அதிகமாக ஓரங்கட்டப்பட்டவர்கள் யார் என்று கண்டுபிடித்து அவர்களுடன் ஒன்றிப்பை காட்டுவது திருச்சபையின் திருப்பணி தெரிவுகளில் அமைந்திட வேண்டிய ஒன்றாகும். இன்றைக்கு நாம் வாழும் சமூகத்தில் ஏராளமான மக்கள் சாதி, சமயம், பாலினம், வர்க்கம் மற்றும் தொழில் அடிப்படையில் ஆயிரக்கணக்கான வருடாங்களாய் சமூகத்தின் விளிம்பிற்கு, ஓரத்திற்கு தள்ளப்பட்டு, வாழமுடியாதவர்களாய், முகவரியற்றவர்களாய், எழமுடியாதவர்களாய், சொந்தமண்ணை இழந்து, மனித மாண்பிழந்து, உரிமைகளை இழந்து நீண்டகால துன்பத்தை அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். அவர்களை இனம்கண்டு அவர்களை மையத்திற்கு கொண்டுசெல்ல வேண்டிய பணியை மேற்கொள்வது நம் திருஅவையின் கடமையாக இருக்கிறது.

"நம்முடைய திருஅவை ஏழைகளின் திருஅவை, அது ஏழைகளுக்கான திருஅவை" என்று ஆணித்தரமாக உலகிற்கு உரைக்கிறார் நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள். "நீதி வழியாகத்தான் ஏழைகளும், எளியவர்களும் நிறைவாழ்வு பெறமுடியும், இயேசுவின் வழியில் சென்றால்தான் இம்மண்ணில் இறையாட்சி மலரும்" என்று ஓயாமல் கூக்குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார் நமது மக்கள் ஆயர் மேதகு. நீதிநாதன் ஆண்டகை அவர்கள். நாம் வாழும் இன்றைய சமூகத்தில் பட்டியலினத்தவர்கள், பழங்குடியினர், பெண்கள், குழந்தைகள், மதம் மாறிய தலித் கிறித்தவர்கள், மூன்றாம் பாலினத்தவர், மாற்றுத்திறனாளிகள், கிராமப்புற ஏழைகள், விவசாய கூலிகள், புலம்பெயர்ந்தோர், அகதிகள், தெரு ஓர அனாதைகள், ஆதரவற்ற முதியோர், நகர்ப்புறத்தில் வாழும் குடிசைப்பகுதி மக்கள் போன்றோர் ஓரத்திற்கு, விளிம்பிற்கு தள்ளப்பட்ட மக்களாக இருக்கின்றனர். ஓரங்களுக்கு தள்ளப்பட்ட மக்களை தேடிச்சென்று தம் திருப்பணியை ஆற்றிய இயேசுவைப்போலவே நமது செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கமும் கடந்த 33 ஆண்டுகளாக விளிம்புநிலை மக்களை மையமாக்கும் பணியை செய்துக் கொண்டு வருகிறது. நம் நிறுவனத்தின் அனைத்து செயல் திட்டங்களின் மூலமாகவும் செயல்பாடுகளின் மூலமாகவும் ஏராளமான விளிம்புநிலை மக்கள், நலிவுற்ற மக்கள் வாழ்வை பெற்று சமூகத்தில் முன்னேறிக்கொண்டு வருகிறார்கள். விளிம்புநிலை மக்களின் முன்னேற்றத்தில், எளியவர்களின் ஏற்றத்தில் இறைமகிமையை காண நம் மறைமாவட்ட ஆயரோடும், நிறுவன இயக்குநரோடும், பணியாளர்களோடும், இலக்கு மக்களோடும் கரம் சேர்த்து இறையாட்சியை இம்மண்ணில் கட்டி எழுப்பிட இணைந்து உழைப்போம். **இறைவன் என்றென்றும் வாழ்த்தப்பெறுவாராக!**

விளிம்பு நிலை மக்களை மையமாக்கும் பணியில்...

**அருட்தந்தை முனைவர். இ. அந்தோணிராஜ்**
MA(Socio),M.Sc(Psy),MA(C.S),M.Ed(Soci,Sci),
MSW(C.D),MBA(Fin),Ph.D(Soci,Sci)
**இயக்குநர் மற்றும் செயலர்**
**செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம்**

# 33 வது ஆண்டறிக்கை

## [01.04.2022 முதல் 31.03.2023]

## முன்னுரை:

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம் 1990 ஆம் ஆண்டு அரசின் சமூக சங்கங்களின் சட்டவிதிகளின்படி முறையாக பதிவு செய்யப்பட்டு கடந்த 33 ஆண்டுகளாக காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டாங்களில் உள்ள கிராமப்புற ஏழை, எளிய மக்கள் மற்றும் மாற்றுத்திறனாளர் களின் வாழ்க்கை மேம்பாடு அடைய பல்வேறு சமூகப்பணிகளை தொடர்ந்து செய்து வருகின்றது. மேலும் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டாங்களில் சமூகத்தில் மிகவும் நலிவடைந்த மக்கள் மற்றும் தலித் மக்களின் வாழ்வியல், கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதர முன்னேற்றத்திற்காகவும், அவர்களுடைய வாழ்க்கையில் அவர்கள் தன்மானம், தன்னிறைவு, தன்னாட்சியோடு வாழ வேண்டும் என்ற உன்னத நோக்கத்தோடு 2 மாவட்டாங்கள், 10 ஒன்றியங்கள், 414 ஊராட்சிகள், 255 குக்கிராமங்கள், 546 மகளிர் குழுக்கள், 76 மாற்றுத்திறனாளி குழுக்கள் என 7742 மகளிர்குழு உறுப்பினர்களையும் சிறப்பாக வழிநடத்தி வருகின்றது. மேலும் இவர்களுக்கு வாழ்வாதார பயிற்சி, கல்வி மேம்பாட்டு பயிற்சி, தலைமைத்துவ பயிற்சி, தொழில் முனைவோர் பயிற்சி, அரசியல் பங்கேற்பு பயிற்சி, தனிநபர் மேம்பாட்டு பயிற்சி, வருமான பெருக்குத்திட்ட பயிற்சி, சுயதொழில் பயிற்சி என பல்வேறு பயிற்சிகளையும் அளித்து ஊக்குவித்து தொடர்ந்து வழிகாட்டியும் வருகின்றது. சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் வழியாக கடந்த ஏப்ரல் மாதம் 2022 முதல் மார்ச் மாதம் 2023 வரையிலான பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் பற்றிய விரிவான அறிக்கையினை உங்கள் அனைவரின் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

## குறிக்கோள்:

**தன்மானம், தன்னிறைவு, தன்னாட்சி**

## சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் பணித்தளங்கள்:

**மாவட்டங்கள் : செங்கல்பட்டு, காஞ்சிபுரம்**

**ஒன்றியங்கள் :**

- திருப்போரூர்
- திருக்கழுக்குன்றம்
- காஞ்சிபுரம்
- வாலாஜாபாத்
- உத்திரமேரூர்
- அச்சிறுப்பாக்கம்
- காட்டாங்கொளத்தூர்
- இலத்தூர்
- சித்தாமூர்
- மதுராந்தகம்

விருதுவாக்கு:

**நீதியுள்ள சமுதாயத்தை உருவாக்கிட...**



# சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

- **காரிதாஸ் இந்தியா – தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விளிம்புநிலை மக்களுக்கான நிவாரண திட்டம்** - (Humanitatrian Assistance to Vulnerable and excluded communities impacted by flooding in Tamilnadu)
- **கோல்பிங் இந்தியா திட்டம் –** (Kolping India)
- **புதிய கண்ணோட்டம் –** (New Thrust)
- **நாபின்ஸ் நுண்கடன் திட்டம் –** (Nabfins)
- **சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டம் –** (Community Based Rehablitation)
- **காரிதாஸ் இந்தியாவின் எழுவோம் இயக்கம் – புற்றுநோய் விழிப்புணர்வு திட்டம் -** (Cancer Awareness)
- பெண்கள் கூட்டமைப்பு (Women Federation)

## 1. காரிதாஸ் இந்தியாவின் சமூக மேலாண்மை பேரிடர் குறைப்புத்திட்டம் - (Caritas India-CMDRR)

காரிதாஸ் இந்தியா - தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விளிம்புநிலை மக்களுக்கான நிவாரண திட்டம் (Humanitatrian Assistance to Vulnerable and excluded communities impacted by flooding in Tamilnadu) காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் கடந்த நவம்பர் மாதம் பெய்த கனமழையால் கிராமங்களில் தாழ்வான பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு விளிம்புநிலை மக்களான பழங்குடியினரின் குடியிருப்புகள் அதிகளவில் சேதமடைந்தன. ஏரிகள், நீர்நிலைகள் அதிகளவில் உள்ள மாவட்டங்களான செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள ஒரகடம், முத்துவேடு மற்றும் ஏனாத்தூர் ஆகிய கிராமங்களில் பழங்குடியினர் அதிகம் வசித்துவரும் பகுதிகள் ஆண்டுதோறும் வெள்ளப்பெருக்கில் பாதிப்படைந்து வருகிறது.

இந்நிலையில் கடந்த ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விளிம்புநிலை மக்களுக்கு நிவாரண பணிகளை மேற்கொள்ள காரிதாஸ் இந்தியா முன்வந்து பாதிக்கப்பட்ட குடியிருப்புகளை புதுப்பிக்கவும், புதியதாக வீடுகளை கட்டித்தரவும் திட்டமிட்டு (காரிதாஸ் இந்தியா தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விளிம்புநிலை மக்களுக்கான நிவாரண திட்டத்தினை சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தி வருகின்றது.

**வீடுகள் புதுபித்தல்:**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள முத்துவேடு மற்றும் ஏனாத்தூர் கிராமங்களில் உள்ள பாதிக்கப்பட்ட 20 குடும்பங்களுக்கு மழைவெள்ளத்தால் பாதிப்படைந்த வீடுகளை புதுப்பித்துக்கொள்ள பயனாளிகளின் வங்கிக் கணக்கில் ரூ.5000 செலுத்தப்பட்டுள்ளது.


பயனாளிகளின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | பயனாளியின் பெயர் | வங்கி கணக்கு எண் | வங்கியின் பெயர் | பெறப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1 | சினேகா | 613739412 | இந்தியன் வங்கி | ரூ.5000.00 |
| 2 | விஜயா | 851874094 | இந்தியன் வங்கி | ரூ.5000.00 |
| 3 | கஸ்தூரி | 6022958556 | இந்தியன் வங்கி | ரூ.5000.00 |
| 4 | ஜோதி | 874988357 | இந்தியன் வங்கி | ரூ.5000.00 |
| 5 | சித்ரா | 6421560369 | இந்தியன் வங்கி | ரூ.5000.00 |
| 6 | பொன்னி | 6870953414 | இந்தியன் வங்கி | ரூ.5000.00 |
| 7 | வெள்ளச்சி | 837323849 | இந்தியன் வங்கி | ரூ.5000.00 |
| 8 | வள்ளி | 897833350 | இந்தியன் வங்கி | ரூ.5000.00 |
| 9 | கன்னியம்மாள் | 6440093682 | இந்தியன் வங்கி | ரூ.5000.00 |
| 10 | வேண்டா | 6004406505 | இந்தியன் வங்கி | ரூ.5000.00 |
| 11 | மகாராணி | 6010731139 | இந்தியன் வங்கி | ரூ.5000.00 |
| 12 | சாந்தி | 6310220352 | இந்தியன் வங்கி | ரூ.5000.00 |
| 13 | லட்சுமி | 7409598427 | இந்தியன் வங்கி | ரூ.5000.00 |
| 14 | சுப்ரமணி கோபால் | 7409600244 | இந்தியன் வங்கி | ரூ.5000.00 |
| 15 | கலைவாணி | 6544905123 | இந்தியன் வங்கி | ரூ.5000.00 |
| 16 | காமாட்சி | 7409590336 | இந்தியன் வங்கி | ரூ.5000.00 |
| 17 | செல்வி | 7409597036 | இந்தியன் வங்கி | ரூ.5000.00 |
| 18 | விஜி / ஜெயா | 7409591589 | இந்தியன் வங்கி | ரூ.5000.00 |
| 19 | ஈஸ்வரி | 6445333178 | இந்தியன் வங்கி | ரூ.5000.00 |
| 20 | அம்பிகா | 917758180 | இந்தியன் வங்கி | ரூ.5000.00 |
| மொத்தம் | | | | ரூ.1,00,000.00 |

# பட்டியலின மக்களுக்கான வீடுகட்டும் திட்டம் மாதிரி படம் பின்வருமாறு :

## DISASTER RESILIENT CONSTRUCTION TECHIQNUE

## பேரிடர் தாங்கும் கட்டுமான தொழில்நுட்பம்



Four sided hipped roofing

நான்கு பக்கமும் கூரை அமைத்தல்



Plinth wall with RRM masonry & pillar footing

RRM முறையில் சிமெண்ட் தூண் நிறுத்துதல்



Beams anchored with pillar bolt

சிமெண்ட் தூணுடன் சவுக்கு கழியை போல்ட் நட்டுடன் இணைத்தல்



Fixing of cross bracing

குறுக்கு கழி வைத்தல்



Use of casuarina pins and coir ropes

சவுக்கு ஆப்பு மற்றும் கயிறு கட்டுதல்



Truss fixing with 30% to 45% angle

10% முதல் 45% கத்தரி வடிவில் கழி வைத்து கட்டுதல்

## DRR METHOD IMPLEMENTED BY CRDS













## பட்டியலின மக்களுக்கான வீடுகட்டும் திட்டம்:

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியத்தில் ஓரகடம் ஊராட்சியிலுள்ள ஓரகடம் கிராமத்தின் மலையடிவாரத்தில் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த 29 குடும்பங்கள் காலம் காலமாக அங்கு வசித்து வந்தனர். கடந்த ஆண்டு அரசின் கட்டுபாட்டுக்குட்பட்ட மலைப்பகுதிகள், ஏரிக்கரை வசிப்பிடங்களை அரசு கையகப்படுத்தும்போது ஓரகடம் பகுதியிலுள்ள மலையை சுற்றியுள்ள குடியிருப்புகளை அரசு அப்புறப்படுத்தி 29 பழங்குடியின குடும்பங்களுக்கு ஓரகடம் கிராமத்தில் மாற்று மனைகள் தனா 2.5 சென்ட் (பட்டாநிலம்) வழங்கப்பட்டது. இச்சூழலில் காரிதாஸ் இந்தியாவின் மழை வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கான களப்பார்வையின்போது காரிதாஸ் இந்தியா மண்டல மேலாளர் முனைவர். ஜான் ஆரோக்கியராஜ் அவர்களிடம் குடியிருப்புகளை இழந்த பழங்குடியின மக்கள் தங்களின் நிலையை எடுத்துக்கூறி உதவியை நாடியபோது காரிதாஸ் இந்தியா மூலமாக 29 குடும்பங்களுக்கும் ரூ.25,000 கொண்டு புதிய வீடு அமைத்துத்தர முடிவெடுக்கப்பட்டு வீட்டிற்கான வரைபடம் தயார்செய்யப்பட்டு வீடுகட்டும் பணிகள் நடைமுறையில் உள்ளது.

## 2.கோல்பிங் இந்தியா திட்டம் : (Kolping India)

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கத்தின் அங்கமாக அகில உலக கத்தோலிக்க திருச்சபையின் மக்கள் செயல்பாட்டு நிறுவனமாக "கோல்பிங் இயக்கம்" செயல்பட்டு வருகின்றது. கடந்த 19 அண்டுகளில் நமது மறைமாவட்டத்திலுள்ள 41 பங்குகளில் 72 கோல்பிங் குழுக்கள் (இஸ்லாமிய சிறுபான்மையினர் சகோதர சகோதரிகளையும் உள்ளடக்கிய) குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்குழுக்களில் 1026 நபர்கள் உறுப்பினர்களாக இணைக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் வழியாக கடந்த 19 ஆண்டுகளில் கோல்பிங் உறுப்பினர்கள் தங்களின் குடும்பம் மற்றும் தனிநபர் வருவாயை பெருக்குவதற்கு இவ்வாண்டு 1305 நபர்கள் சுழற்சி முறையில் கடன்பெற்று பயன்பெற்றுள்ளனர். இதுவரை அவர்களுக்கு கோல்பிங் இந்தியா நிறுவனத்தின் வழியாக அளிக்கப்பட்டுள்ள கடன்தொகை மொத்தம் ரூ.95,33,850.00 ஆகும்.

## குறிக்கோள்:

கோல்பிங் உறுப்பினர்கள் பொறுப்புள்ள மனிதர்களாகவும், பொறுப்புள்ள குடும்ப உறுப்பினர்களாகவும், தகுதிவாய்ந்த சுதந்திரமான உழைப்பாளர்களாகவும், பொறுப்புள்ள சமூக உறுப்பினர்களாகவும் விளங்கிட வேண்டும் என்பதுதான் இத்திட்டத்தின் தலையாய குறிக்கோளாக உள்ளது.

## நோக்கம்:

கோல்பிங் உறுப்பினர்கள் அனைவரையும் ஆன்மீகத்தோடு இணைந்த பொருளாதார முன்னேற்றத்தில் தன்னிறைவை நோக்கி பயணிக்கச் செய்தல்.

## கோல்பிங் திட்டத்தின் வழியாக நிறைவேற்றப்படும் திட்டங்கள்:

- வருவாய் பெருக்குத்திட்டம் (Income Generation Programme)
- கூட்டுவருவாய் பெருக்குத்திட்டம் (Collective Income Generation Programme)
- கறவைமாடு வளர்ப்புத்திட்டம் (Milch Animal Programme)
- வீடுகட்டும் திட்டம் (Housing Support Programme)
- தொழிற்பயிற்சி கல்வித்திட்டம் (Vocational Training Programme)
- தனிநபர் கழிவறைத்திட்டம் (Individual Toilet Programme)

## கோல்பிங் சுற்றுச்சூழல் மேலாண்மைத்திட்டம்:

கோல்பிங் இந்தியாவின் சுற்றுச்சூழல் மேலாண்மைத்திட்டம் மறைமாவட்டத்தில் உள்ள 6 கிராமங்களில் செயல்படுத்த முடிவுசெய்யப்பட்டு, கிராமங்களில் சுற்றுச்சூழலை மேம்படுத்த பஞ்சாயத்து மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுடன் இணைந்து தேர்வு செய்யப்பட்ட களப்பகுதிகள் பின்வருமாறு:

| வ. எண் | மாவட்டம் | ஒன்றியம் | ஊராட்சி | கிராமம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு | திருப்போரூர் | ஆலத்தூர் | ஆலத்தூர் |
| 2 | செங்கல்பட்டு | திருப்போரூர் | பையனூர் | அந்தோணியார் நகர் |
| 3 | செங்கல்பட்டு | திருப்போரூர் | ஒரகடம் | ஒரகடம் |
| 4 | காஞ்சிபுரம் | உத்திரமேரூர் | பெருங்கோழி | பெருங்கோழி |
| 5 | காஞ்சிபுரம் | உத்திரமேரூர் | கம்மாளம்பூண்டி | கம்மாளம்பூண்டி |
| 6 | காஞ்சிபுரம் | வாலாஜாபாத் | ஏனாத்தூர் | ஏனாத்தூர் |




### கடந்த ஓராண்டில் திட்ட கிராமங்களில் வழங்கப்பட்ட பயிற்சிகள்:

- தலைமைத்துவ பயிற்சி
- சுகாதார விழிப்புணர்வு பயிற்சி
- வலைப்பின்னல் பயிற்சி
- தொழில்முனைவோர் பயிற்சி
- வருமானப்பெருக்கு பயிற்சி
- சுற்றுச்சூழல் மேலாண்மை பயிற்சி
- ஆலோசனை மற்றும் மேம்பாட்டு பயிற்சி

## கோல்பிங் உறுப்பினர்களின் வளர்ச்சிகள்:

- கோல்பிங் இயக்கத்தின் வழியாக பங்கு மற்றும் கிராம அளவில் குழுக்களாக பயனாளிகள் இணைக்கப்பட்டுள்ளனர்.
- தொடர் சேமிப்பு செய்கின்றனர்.
- சமூக ஈடுபாடுகளில் கவனம் செலுத்துகின்றனர்.
- ஆன்மீக வளர்ச்சிகளில் ஈடுபாடு
- சிறந்த குடிமக்களாக சமூகத்தில் வாழ ஊக்கம்பெற்று வருகின்றனர்.
- ஆரோக்கியமாக வாழவேண்டிய வழிமுறைகளை கையாளுகின்றனர்.
- திட்டப்பயிற்சிகளில் பங்கேற்பதால் தனிநபர், குடும்பம், குழுக்கள் கிராமங்களில் உள்ள இன்றைய சூழலை அறிந்துக்கொள்கின்றனர்.

## பொருளாதார மேம்பாட்டிற்கான ஆடுவளர்ப்பு திட்டம்:



செங்கல்பட்டு மாவட்டம் ஓரகடம் பகுதியில் வாழ்ந்துவரும் பழங்குடியின இருளர் பகுதியில் இயங்கிவரும் கன்னியம்மன் கோல்பிங் குழு, மாரியம்மன் கோல்பிங் குழு ஆகிய இரு குழுவில் உள்ள 27 உறுப்பினர்களுக்கு வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் வருமான பெருக்குத்திட்டம் வழியாக 27 பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன.

## கோல்பிங் இந்தியாவின் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டம்:

சமூகத்தில் விளிம்புநிலையில் உள்ள மக்களை இனம்கண்டு அவர்களுக்கான முன்னேற்ற பணிகளை தொடர்ந்து செய்துவரும் கோல்பிங் இந்தியா நிறுவனம் ஓரகடம் பகுதியில் உள்ள பழங்குடியின மக்களோடு இணைந்து கடந்த 15-12-2022 அன்று கிறிஸ்து பிறப்பு விழாவினை கொண்டாடினர். இவ்விழாவில் கோல்பிங் இந்தியாவின் அலுவலக பணியாளர்கள் அனைவரும் கலந்துக்கொண்டு 46 தாழ்த்தப்பட்ட பழங்குடியின குடும்பங்களுக்கு கிறிஸ்து பிறப்பு விழாவிற்கான பரிசுபொருட்களை வழங்கினார்கள்.



## கோல்பிங் குடும்ப விழா:

ஆண்டுதோறும் அக்டோபர் 27 அடால்ப் கோல்பே முத்திபேறு பெற்ற நாளானது கோல்பிங் குடும்ப விழாவாக சிறப்பிக்கப்படுகிறது. இவ்வாண்டு அக்டோபர் 27 ஆம் நாள் சி.ஆர்.டி.எஸ் அலுவலகத்தில் கோல்பிங் தினமானது சி.ஆர்.டி.எஸ் இயக்குநர் முனைவர் இ.அந்தோணிராஜ், பணி.ஜேக்கப், திருத்தொண்டர்.டேவிட் மதிவாணன் ஆகியோரால் சிறப்புத்திருப்பலி நிறைவேற்றப்பட்டு சிறப்பிக்கப்பட்டது. இந்நிகழ்வில் 60க்கும் மேற்பட்ட கோல்பிங் உறுப்பினர்கள் கலந்துக்கொண்டனர்.

## குழு சுழல்நிதி தொழிற்கடன் பெற்றவர்கள்:

| வ. எண் | பங்கு | கிராமத்தின் பெயர் | குழுவின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | வேடந்தாங்கல் | வளையபுத்தூர் | பறவைகள் சரணாலயம் கோல்பிங் குழு | 1,00,000 |
| 2 | ஒரகடம் | ஒரகடம் | ஆரோக்கியமாதா கோல்பிங் குழு | 1,00,000 |
| 3 | வல்லம் | இருங்குன்றபள்ளி | செவ்வந்தி கோல்பிங் குழு | 1,00,000 |
| 4 | பட்டிபுலம் | சாலவான்குப்பம் | செம்பருத்தி கோல்பிங் குழு | 1,00,000 |
| 5 | பட்டிபுலம் | சாலவான்குப்பம் | காமராஜர் கோல்பிங் குழு | 1,00,000 |
| 6 | விப்பேடு | விப்பேடு | அந்தோணியார் கோல்பிங் குழு | 1,00,000 |
| 7 | ஒரகடம் | கழுணிப்பாக்கம் | அம்பேத்கார் கோல்பிங் குழு | 1,00,000 |
| 8 | ஆலத்தூர் | ஆலத்தூர் | குயின் கோல்பிங் குழு | 1,00,000 |
| 9 | ஆலத்தூர் | ஆலத்தூர் | ஆலயமணி கோல்பிங் குழு | 1,00,000 |
| 10 | கோவளம் | கோவளம் | புனித கார்மேல் அன்னை கோல்பிங் குழு | 1,00,000 |
| 11 | மேலச்சேரி | மேல்மணப்பாக்கம் | சிகரம் கோல்பிங் குழு | 1,00,000 |
| 12 | தச்சூர் | தச்சூர் | மழைமலைமாதா கோல்பிங் குழு | 1,00,000 |
| 13 | ஒரகடம் | ஒரகடம் | சகாயமாதா கோல்பிங் குழு | 1,00,000 |
| 14 | ஒட்டியம்பாக்கம் | ஒட்டியம்பாக்கம் | புனித சகாயமாதா கோல்பிங் குழு | 1,00,000 |
| 15 | பல்லாவரம் | பல்லாவரம் | புனித அன்னை தெரெசா கோல்பிங் குழு | 1,00,000 |
| 16 | மாமல்லபுரம் | மாமல்லபுரம் | திருக்குடும்பம் கோல்பிங் குழு | 1,00,000 |
| 17 | காஞ்சிபுரம் | ஏனாத்தூர் | அன்னை தெரசா கோல்பிங் குழு | 1,00,000 |
| 18 | வேடந்தாங்கல் | விநாயகநல்லூர் | விண்ணரசி மாதா கோல்பிங் குழு | 1,00,000 |
| 19 | வல்லம் | இருங்குன்றபள்ளி | மதுடம் கோல்பிங் குழு | 1,00,000 |
| 20 | அச்சிறுப்பாக்கம் | உத்தமநல்லூர் | புனித அந்தோணியார் கோல்பிங் குழு | 1,50,000 |
| | | | மொத்தம் | 20,50,000 |

## சமூக நல்லிணக்க செயல்பாடுகள்:

கோல்பிங் குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் நற்செய்தியின் மதிப்பீடுகளை தங்கள் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டுவதற்கு பங்குத்தளங்கள் மற்றும் கிளைப்பங்குகளில் உள்ள பல்வேறு பொதுச்சேவை பணிகளில் பங்குப் பணியாளர்களுடன் தன்னார்வமுடன் ஈடுபட்டு பணிசெய்து வருவது போற்றுதற்குரியதாக அமைந்திருக்கிறது.

தங்கள் கிராமத்தின் வளர்ச்சியை கருத்தில்கொண்டு கிராமத்தில் உள்ள ஏழை, எளிய மக்களின் ஆன்மீக மற்றும் பொருளாதார தேவைகளை அறிந்து உதவும் பணிகளை கோல்பிங் குழுக்கள் மேற்கொண்டு வருகின்றன.

நலிந்தோருக்கு உதவுதல், முதியோர் இல்லம் சந்திப்பு, ஏழை, எளிய மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல், ஆதரவற்று இறக்கும் விசுவாசிகளை நல்லடக்கம் செய்தல், நோய்வாய்பட்டோருக்காக ஜெபித்தல், ஆலய வளாகம் மற்றும் பொது இடங்களை தூய்மைப்படுத்துல் போன்ற பணிகளை சிறப்பாக கோல்பிங் இயக்கங்கள் செயல்படுத்திக்கொண்டு வருகின்றன.

## பொருளாதார செயல்பாடுகள்:

கோல்பிங் உறுப்பினர்கள் அனைவரும் தங்களிடையே சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கி ஒருமித்த கருத்துடன் செயல்பட்டு கல்வி, சமூக பொருளாதார மற்றும் அரசியல் முன்னேற்ற செயல்பாடுகளில் தனிநபர் ஒருவர் குறைந்தபட்சம் ரூ.100 முதல் அதிகபட்சம் ரூ.1000 வரை சேமிக்கின்றனர். வங்கிகளில் கூட்டுக்கணக்கு துவங்கி நிதியினை பராமரிக்கவும், குழு உறுப்பினர் களின் தேவைக்கு உள்கடன் வழங்கி தங்கள் தேவைகளை பூர்த்தி செய்தும் வருகின்றனர்.

## கோல்பிங் இறப்பு நிதி:

கோல்பிங் இயக்க உறுப்பினர்கள் இயற்கை மற்றும் விபத்துக்கள் காரணமாக இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பத்திற்கு கோல்பிங் இறப்பு நிதி வழியாக ரூ.5000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு 5 நபர்களுக்கு இறப்புத்தொகை பெற்றுத்தரப்பட்டுள்ளது. அதன்விவரம் பின்வருமாறு:

| வ. எண் | கிராமம் | இறந்தவரின் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | விப்பேடு | சங்கீதா | ரூ. 5000.00 |
| 2 | கடப்பாக்கம் | லூர்துமேரி | ரூ. 5000.00 |
| 3 | விநாயகநல்லூர் | அன்னமேரி | ரூ. 5000.00 |
| 4 | இருங்குன்றபள்ளி | பரிமளா | ரூ. 5000.00 |
| 5 | செங்காட்டூர் | அமலோற்பவம் | ரூ. 5000.00 |
| 6 | சகாயபுரம் | சி.அன்னமேரி | ரூ. 5000.00 |
| 7 | செண்டிவாக்கம் | சி. சாமிநாதன் | ரூ. 5000.00 |
| 8 | செண்டிவாக்கம் | சி. ஏசுதாஸ் | ரூ. 5000.00 |
| 9 | முத்துவேடு | ஜெசிந்தா | ரூ. 5000.00 |
| 10 | திருக்கழுக்கன்றம் | அமல்ராஜ் | ரூ. 5000.00 |
| மொத்தம் | | | **ரூ.50,000.00** |



கோல்பிங் இந்தியா கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டம் – ஒரகடம் கிராமம்:



கோல்பிங் திட்ட இறப்பு நிதி பெற்றவர்கள்:



## 3.புதிய கண்ணோட்டம் (New Thrust) :

புதிய கண்ணோட்டத் திட்டபணியானது தமிழக சமூகப்பணி மையம் (Tasoss - Trichy) நிறுவன வழிகாட்டுதலுடன் கடந்த 22 ஆண்டுகளாக 6 கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 6 வது கட்டத்தின் திட்ட பணிகள் மூலம் இலக்கு மக்கள் உரிமை சார்ந்த பிரச்சனைகள், வாழ்வாதாரம், குழந்தைகள் பாராளுமன்றம் துவங்குதல் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு மாவட்ட அளவில் கடந்த 23 ஆண்டுகளாக பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டத்தின் தொடர்செயல்பாடாக புதிய கண்ணோட்ட திட்டம் 7வது கட்ட பணியானது 2021 ஜீன் மாதம் முதல் 2024 ஆம் ஆண்டு மே மாதம் வரையிலான கீழ்கண்ட திட்ட செயல்பாடுகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### புதிய கண்ணோட்ட திட்டம் – 7 ஆம் கட்டம் (நமது கிராமம் நமது முன்னேற்றம்) :

நோக்கம்: நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்கின் அடிப்படையில் முழு கிராம வளர்ச்சி நிலையை உருவாக்குதல்

திட்ட காலம்: 2022 ஜீன் முதல் 2023 மே வரை

### கிராம வளர்ச்சி:

- கிராமப்புறங்களில் வாழும் மக்கள் சமூக, பொருளாதார நிலைகளில் மேம்பாடு அடைதல்.
- வறுமை, கல்வி, நலவாழ்வு, வேலைவாய்ப்பு, சமத்துவம் அகியவற்றில் மேம்பாடு அடைதல்.
- அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள், வீட்டுவசதி, குடிநீர் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில் மேம்பாடு அடைதல்.
- அனைவருக்கும் சமமான மனித திறமைகளை உயர்த்தும் மாற்றுநிலை

சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் பணித்தளமாகிய காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம், கருவேப்பம்பூண்டி கிராம ஊராட்சி புதிய கண்ணோட்ட திட்ட பணிக்கான இலக்கு கிராமமாக நிறுவனத்தின் இயக்குநர் மற்றும் பணியாளர்களால் தேர்வு செய்யப்பட்டு முறையாக திருச்சி டாசோஸ் நிறுவனத்தின் வழிகாட்டுதலுடன் செயல்பாடுகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### கிராமப்புற ஊராட்சியில் தேர்வு செய்யப்பட்ட பகுதிகள்:

- கருவேப்பம்பூண்டி - ஆதிதிராவிடர் பகுதி
- கருவேப்பம்பூண்டி - மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி
- கருவேப்பம்பூண்டி - மடம்



மேற்குறிப்பிட்ட பகுதிகளை இணைத்து இக்கிராமத்தில் உள்ள 13 மகளிர் குழு உறுப்பினர்கள், ஊராட்சி அமைப்பின் தலைவர், வார்டு உறுப்பினர், ஊராட்சி செயலர் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோர்களை இணைத்து கிராமத்தின் வழியாக செயல்படுத்தப்படும் பணிகள் திட்டமிடப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

### திட்டத்தின் வழியாக செயல்படுத்தப்படும் பணிகள்:

- கிராம வளர்ச்சி பணிகள்
- வாழ்வாதார பணிகள்
- குழந்தைகள் அமைப்புகள் / குழந்தைகள் பாராளுமன்றம்

மேற்கண்ட மூன்று இலக்கு பணிகளை மையமாகக்கொண்டு ஊராட்சி அளவில் மக்களுக்கான பணிகளை மக்களே திட்டமிட்டு செயல்படுத்தி வருகின்றனர்.

## கிராம வளர்ச்சி பணிகள்:

ஊராட்சி அளவில் கிராம மக்கள் விழிப்புணர்வு பெறும் வகையில் ஊராட்சியின் கிராமங்களை மையமாகக்கொண்ட பணிகளின் விவரம் அறிதல், ஊராட்சி நிர்வாகத்தின் செயல்பாடுகள், எதிர்காலத் திட்டங்கள், அரசின் மூலம் பெறப்படும் திட்டங்கள், ஊராட்சியின் பொது சொத்துக்கள், பொது வளங்கள் பயன்பாடு, மக்கள் பங்கேற்புடன் செயல்படும் திட்டங்கள், கிராம சபை பங்கேற்பு, ஊராட்சியின் வருவாய் போன்றவைகளை அறிந்து அவற்றின் பயன்களை கிராமங்களுக்கு ஏற்றவாறு திட்டமிடுதலுக்காக கீழ்காணும் அமைப்புகள் உருவாக்கப்பட்டு செயல்திட்டங்கள் தீட்டப்பட்டு நடைமுறையில் உள்ளன.

## கிராம வளர்ச்சி:

- கிராம வளர்ச்சி குழு ( VDC)
- மகளிர் சுயஉதவிக்குழுக்கள் (SHG)
- ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு (PLF)
- நீர் ஆதாரக் குழு (Water Community)
- ஊராட்சி அளவிலான பல்நோக்கு சேவையாளர்கள் (MSH)
- வாழ்வாதாரக் குழு
- குழந்தைகள் பாராளுமன்றம் (CP)

## கிராம வளர்ச்சிக்குழுவின் ஆலோசனைகளின் படி கீழ்காணும் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

- கருவேப்பம்பூண்டி முதல் மடம் வரை 2 கீ.மி தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது.
- கருவேப்பம்பூண்டி ஆதிதிராவிடர் பகுதி 2 வது தெருவில் இருபுறமும் சிமெண்ட கால்வாய் மற்றும் சிமெண்ட சாலை அமைத்துத்தரப்பட்டுள்ளது.
- மகளிர் கட்டிடத்தில் அரசின் அனுமதியுடன் தற்காலிகமாக இயங்கி வந்த நியாயவிலைக்கடை இடமாற்றம் செய்யப்பட்டு புதிய நியாயவிலைக்கடை அமைக்கப்பட்டுள்ளது.
- கருவேப்பம்பூண்டி ஊராட்சியில் ஆதிதிராவிடர் பகுதியில் உள்ள மாரியம்மன் கோவில்தெருவின் சந்திப்பில் பல ஆண்டுகளாக பழுதடைந்த நிலையில் இருந்துவந்த கிணறு ஒன்று மணல்கொண்டு நிரப்பி தரைமட்டம் செய்யப்பட்டு சாலையாக மாற்றப்பட்டுள்ளது.

## வாழ்வாதாரப்பணிகள்:

கருவேப்பம்பூண்டி ஊராட்சியிலுள்ள கிராம மகளிர் குழுக்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு சிறுதொழில் செய்து வியாபாரத்தை பெருக்கும் உத்திகள் மற்றும் சிறுதொழில் தொடர்பான கீழ்காணும் பயிற்சிகள் கடந்த ஓராண்டில் அளிக்கப்பட்டுள்ளது.

- பினாயில் தயாரித்தல்
- சாம்பிராணி தயாரித்தல்
- ஊதுவத்தி தயாரித்தல்
- கிருமிநாசினி தயாரித்தல்
- சைசால் தயாரித்தல்
- பாத்திரம் தேய்க்கும் பவுடர் தயாரித்தல்
- பழைய துணிகளைக்கொண்டு கால்மிதி தயாரித்தல்



மேற்கண்ட சிறுதொழில் செய்ய ஆர்வமுள்ளவர்களை இனம்கண்டு வாழ்வாதார தொழில் பயிற்றுநர்களைக்கொண்டு பயிற்றுவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் கருவேப்பம்பூண்டி கிராமத்தில் உள்ள 4 மகளிர் குழுக்கள் இணைந்து சிறுதொழில் செய்து இலாபம் ஈட்டி வருகின்றனர்.





## தனிநபர் வருமானம் பெருக்குதல்:

தனியாக தொழில் செய்யும் ஆர்வமுள்ள மகளிர்குழு உறுப்பினர்களுக்கு பெட்டிக்கடை, காய்கறி கடை, தேனீர்கடை, போன்றவற்றை அமைத்து சிறுதொழில் வியாபாரிகளாக உருவாக்கப்பட்டுள்ளனர். இதன்மூலம் தனிநபர் வருமானம் பெருக்கப்பட்டு சுயசார்புடையவர்களாக சமுதாயத்தில் வாழ புதிய கண்ணோட்ட திட்டம் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றது.



## மதிப்புக் கூட்டுத்தொழில்:

புதிய கண்ணோட்ட திட்டத்தின் மூலம் திருக்கழுக்குன்றம் ஒன்றியத்திலுள்ள புலியூர் கிராம கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இணைந்து அரிசி வியாபாரம் செய்து பெருமளவில் இலாபம் ஈட்டி வருகின்றனர். இச்செயல்பாட்டைத் தொடர்ந்து எதிர்காலங்களில் மாற்றுத்தொழிலாக அரிசி வியாபாரத்துடன் தொடர்புடைய மதிப்புக் கூட்டுத்தொழிலான நெல் கொள்முதல் செய்தல், அரிசி, தவிடு போன்றவற்றை பிரித்து விற்பனை செய்து வருமானத்தை பெருக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

## குழந்தைகள் பாராளுமன்றம்:

செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் உள்ள 10 ஒன்றியங்களிலும் புதிய கண்ணோட்ட திட்ட வழிகாட்டுதல் மற்றும் தொடர்பயிற்சிகளின் அடிப்படையில் 30 குழந்தைகள் பாராளுமன்றம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்செயல்பாடாக குழந்தைகளிடம் குழுவாக சேமிக்கும் பழக்கம் உருவாக்கப்பட்டு வங்கிகளில் கணக்கு தொடங்கி சேமித்து வருகின்றனர். இவ்வாறு சேமிக்கப்படும் தொகையானது குழந்தைகளின் கல்விச் செலவினங்களுக்காக பயன்படுத்தப்படுகிறது. மேற்கண்ட செயல்பாடுகளைத் தொடர்ந்து ஒன்றியம் வாரியாக அமைக்கப்பட்டுள்ள குழந்தைகள் பாராளுமன்றங்களின் பட்டியல் பின்வருமாறு:





## ஒன்றியம் வாரியாக அமைக்கப்பட்டுள்ள குழந்தைகள் பாராளுமன்றங்களின் பட்டியல் பின்வருமாறு:

| வ. எண் | ஒன்றியம் | கிராமம் | குழுவின் பெயர் | உறுப்பினர் | சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | திம்மசமுத்திரம் | மகாத்மா காந்தி | 16 | 29,600 |
| 2 | காஞ்சிபுரம் | கன்னடியன்குட்டை | டாக்டர்.அப்துல்கலாம் | 14 | - |
| 3 | காஞ்சிபுரம் | பெரும்பாக்கம் | விண்மீன்கள் | 24 | - |
| 4 | காஞ்சிபுரம் | முத்துவேடு | வெற்றிச்சிங்கம் | 28 | - |
| 5 | காஞ்சிபுரம் | பாலமடை | காமராசர் | 13 | - |
| 6 | காஞ்சிபுரம் | குருவிமலை | அண்ணா | 15 | - |
| 7 | வாலாஜாபாத் | சிறுவாக்கம் | அன்னை தெரசா | 12 | 13,200 |
| 8 | வாலாஜாபாத் | சிறுவாக்கம் | டாக்டர்.அப்துல்கலாம் | 13 | 6,250 |
| 9 | வாலாஜாபாத் | புதுகாலனி | வெற்றி வீரர்கள் | 12 | - |
| 10 | வாலாஜாபாத் | வாரணவாசி | மலர்கள் | 12 | 2000 |
| 11 | திருப்போரூர் | அந்தோணியார்நகர் | டாக்டர்.அப்துல்கலாம் | 15 | - |
| 12 | திருப்போரூர் | ஓரகடம் பழங்குடியினர் பகுதி | டாக்டர்.அப்துல்கலாம் | 23 | - |
| 13 | திருப்போரூர் | ஓரகடம் | டாக்டர்.அம்பேத்கார் | 17 | - |
| 14 | திருப்போரூர் | ஆலத்தூர | ராஜீவ் காந்தி | 11 | - |
| 15 | திருப்போரூர் | ஓரகடம் | டாக்டர் அம்பேத்கார் | 12 | - |
| 16 | திருப்போரூர் | ஆலத்தூர் | அன்னை தெரசா | 12 | - |
| 17 | இலத்தூர் | சீவாடி | விவேகானந்தர் | 14 | 71,400 |
| 18 | இலத்தூர் | சீவாடி | மகாத்மா காந்தி | 14 | 71,400 |
| 19 | இலத்தூர் | சீவாடி | டாக்டர்.அம்பேத்கார் | 20 | 1.02.000 |
| 20 | இலத்தூர் | சீவாடி | ஜான்சி ராணி | 18 | 91,800 |
| 21 | இலத்தூர் | சீவாடி | டாக்டர்.அப்துல்கலாம் | 20 | 1.20.000 |
| 22 | உத்திரமேரூர் | அம்மையப்பநல்லூர் | டாக்டர்.அம்பேத்கார் | 15 | 3000 |
| 23 | உத்திரமேரூர் | பெருங்கோழி | டாக்டர்.அம்பேத்கார் | 15 | 1000 |
| 24 | உத்திரமேரூர் | மல்லிகாபுரம் | டாக்டர்.நீதிநாதன் | 15 | - |
| 25 | அச்சிறுப்பாக்கம் | நேமம் | டாக்டர்.அம்பேத்கார் | 14 | - |
| 26 | திருக்கழுக்குன்றம் | புலியூர் | இயற்கை | 20 | 38.000 |
| 27 | திருக்கழுக்குன்றம் | புலியூர் | துளிர்கள் | 12 | 8.000 |
| 28 | திருக்கழுக்குன்றம் | புலியூர் | டாக்டர். அம்பேத்கார் | 17 | 12,500 |
| 29 | திருக்கழுக்குன்றம் | சோகண்டி | சிறுமலர் | 13 | - |
| 30 | திருக்கழுக்குன்றம் | சோகண்டி | குழந்தை தெரசா | 12 | - |

## 4. நாபின்ஸ் நுண்கடன் திட்டம்: (Nabfins)

நாபின்ஸ் நுண்கடன் திட்டமானது கடந்த 2017 ஆம் ஆண்டுமுதல் 7 ஆண்டுகளாக சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்துடன் இணைந்து நபார்டு வங்கியின் மூலம் நிதி உதவி பெற்று செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் 10 ஒன்றியங்களில் உள்ள ஏழை, எளிய கிராமப்புற மக்களுக்கு கடனுதவி வழங்கி பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய வழிகாட்டி வருகிறது. இக்கடனுதவித் தொகையானது மகளிர் குழுக்கள் மற்றும் குழுக்கள் அல்லாத கூட்டு பொறுப்பு குழு (JLG) உறுப்பினர்களுக்கு அவர்கள் விரும்பும் தொழில்செய்து வருமானத்தை பெருக்கிக்கொள்ளவும், விவசாயம் போன்ற உற்பத்தி செயல்பாடுகளை ஊக்குவித்து பெண்களை தொழில் முனைவோராக மாற்றும் நோக்கத்திற்காக வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டு வரும் மகளிர் குழுக்கள் மற்றும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் பணித்தள கிராமங்களில் உள்ள கூட்டு பொறுப்புக்குழு உறுப்பினர்களுக்கு தொழில் நோக்கத்திற்காக கடந்த ஓராண்டில் நாபின்ஸ் நுண்கடன் திட்டத்தின் மூலம் ஒன்றியம் வாரியாக பெற்றுத்தரப்பட்ட கடனுதவித் தொகை ரூ.4,91,79,000.00 (நான்கு கோடியே தொண்ணூற்று ஒரு இலட்சத்து எழுபத்து ஒன்பதாயிரம்) ஆகும். விவரம் பின்வருமாறு:

| வ.எண் | கிராமம் | குழுவின் பெயர் | பெறப்பட்ட தொகை |
|---|---|---|---|
| | | **திருப்போரூர் ஒன்றியம்** | |
| 1 | சிறுதாவூர் | செம்பருத்தி மகளிர் குழு | 6,50,000.00 |
| 2 | சிறுதாவூர் | பீமாபாய் மகளிர் குழு | 7,35,000.00 |
| 3 | சிறுதாவூர் | டாக்டர்.அம்பேத்கார் மகளிர் குழு | 10,10,000.00 |
| 4 | சிறுதாவூர் | முல்லை மகளிர் குழு | 10,40,000.00 |
| 5 | ஒரகடம் | கங்கை மகளிர் குழு | 9,00,000.00 |
| 6 | ஒரகடம் | தாமரை மகளிர் குழு | 5,75,000.00 |
| 7 | பெரியவிப்பேடு | சம்பங்கி மகளிர் குழு | 5,90,000.00 |
| 8 | சிறுதாவூர் | வெற்றி ஜே.எஸ்.ஜி | 1,60,000.00 |
| 9 | ஆலத்தூர் | அல்லி மகளிர் குழு | 6,00,000.00 |
| 10 | சிறுதாவூர் | தாமரை மகளிர் குழு | 6,00,000.00 |
| 11 | சோகண்டி | புரட்சி மகளிர் குழு | 4,00,000.00 |
| 12 | ஒரகடம் | மல்லி ஜே.எல்.ஜி | 2,50,000.00 |
| 13 | ஆலத்தூர் | தாமரை ஜே.எல்.ஜி | 2,50,000.00 |
| | | **மொத்தம்** | **77,60,000.00** |
| | | **மதுராந்தகம் ஒன்றியம்** | |
| 14 | பள்ளியகரம் | ஸ்ரீராமர் ஜே.எல்.ஜி | 3,00,000.00 |
| 15 | பள்ளியகரம் | பட்டாபிராம் ஜே.எல்.ஜி | 2,20,000.00 |
| 16 | மலைப்பாளையம் | மல்லிகை மகளிர் குழு | 9,20,000.00 |
| 17 | மலைப்பாளையம் | கல்பனா சாவ்லா ஜே.எஸ்.ஜி | 4,40,000.00 |
| 18 | கே.கே.புதூர் | செம்பருத்தி மகளிர் குழு | 4,95,000.00 |
| 19 | கே.கே.புதூர் | ஆரோக்கியமாதா மகளிர் குழு | 6,95,000.00 |
| 20 | நெல்வாய் | ரோஜா மகளிர் குழு | 8,75,000.00 |

# நாபின்ஸ் நுண்கடன் திட்டம்: (Nabfins)

| வ. எண் | கிராமம் | குழுவின் பெயர் | பெறப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 21 | நெல்வாய் | செவ்வந்தி ஜே.எல்.ஜி | 2,40,000.00 |
| 22 | கீழ்ப்பட்டு | டாக்டர் அம்பேத்கார் மகளிர்குழு | 3,15,000.00 |
| 23 | கீழ்ப்பட்டு | அப்துல்கலாம் மகளிர் குழு | 3,15,000.00 |
| மொத்தம் | | | **48,15,000.00** |
| **சித்தாமூர் ஒன்றியம்** | | | |
| 24 | கீழ்மருவத்தூர் | ஓம்சக்தி மகளிர் குழு | 5,00,000.00 |
| 25 | கீழ்மருவத்தூர் | மகாத்மாகாந்தி மகளிர் குழு | 3,20,000.00 |
| மொத்தம் | | | **8,20,000.00** |
| **இலத்தூர் ஒன்றியம்** | | | |
| 26 | உடல்காரக்குப்பம் | கருமாரியம்மன் மகளிர் குழு | 5,75,000.00 |
| 27 | உடல்காரக்குப்பம் | முத்துமாரியம்மன் ஜே.எல்.ஜி | 4,00,000.00 |
| 28 | உடல்காரக்குப்பம் | மல்லிகை ஜே.எல்.ஜி | 2,40,000.00 |
| 29 | பசுவநத்தம் | கடமை மகளிர் குழு | 4,75,000.00 |
| 30 | பசுவநத்தம் | சுடர் மகளிர் குழு | 4,90,000.00 |
| 31 | நெல்வாய் பாளையம் | முல்லை மகளிர் குழு | 4,05,000.00 |
| 32 | கூவத்தூர் | செம்பருத்தி மகளிர் குழு | 4,95,000.00 |
| 33 | கூவத்தூர் | பாரிஜாதம் மகளிர் குழு | 4,95,000.00 |
| 34 | கூவத்தூர் | சாமந்தி மகளிர் குழு | 4,05,000.00 |
| 35 | சீவாடி | செந்தமிழ் மகளிர் குழு | 6,50,000.00 |
| 36 | சீவாடி | இயற்கை மகளிர் குழு | 2,70,000.00 |
| மொத்தம் | | | **49,00,000.00** |
| **காஞ்சிபுரம் ஒன்றியம்** | | | |
| 37 | குருவிமலை | முத்துலட்சுமி அம்மையார் குழு | 5,00,000.00 |
| 38 | பாலமடை | புன்னகை ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 39 | விஷார் | அன்பு ஜே.எல்.ஜி 1 | 1,60,000.00 |
| 40 | முத்துவேடு | குடும்பம் ஜே.எல்.ஜி 1 | 1,60,000.00 |
| 41 | முத்துவேடு | குடும்பம் ஜே.எல்.ஜி 2 | 1,60,000.00 |
| 42 | சின்ன ஐயங்குளம் | அன்னை தெரசா மகளிர் குழு | 2,80,000.00 |
| 43 | சின்ன ஐயங்குளம் | ஐஸ்வர்யம் ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 44 | விஷார் | அன்பு ஜே.எல்.ஜி 2 | 1,60,000.00 |
| 45 | குருவிமலை | கெங்கையம்மன் மகளிர் குழு | 8,80,000.00 |
| 46 | விஷார் | அன்பு ஜே.எல்.ஜி 3 | 2,40,000.00 |
| 47 | விஷார் | அன்பு ஜே.எல்.ஜி 4 | 2,00,000.00 |
| 48 | சி.வி.எம் நகர் | ஏஞ்சல் மகளிர் குழு | 6,00,000.00 |
| 49 | சி.வி.எம் நகர் | தேசம் மகளிர் குழு | 5,25,000.00 |
| 50 | முத்துவேடு | முத்துச்சரம் ஜே.எல்.ஜி 1 | 1,60,000.00 |
| 51 | முத்துவேடு | முத்துச்சரம் ஜே.எல்.ஜி 2 | 1,60,000.00 |

| வ. எண் | கிராமம் | குழுவின் பெயர் | பெறப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 52 | விப்பேடு | இமயம் மகளிர் குழு | 5,55,000.00 |
| 53 | முத்துவேடு | ரோஜா ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 54 | தென்னேரி | உதயம் ஜே.எல்.ஜி 1 | 2,40,000.00 |
| 55 | முத்துவேடு | முல்லை ஜே.எல்.ஜி 1 | 1,60,000.00 |
| 56 | முத்துவேடு | முல்லை ஜே.எல்.ஜி 2 | 1,60,000.00 |
| 57 | முத்துவேடு | ஜே.எல்.ஜி 1 | 2,50,000.00 |
| 58 | முத்துவேடு | ஜே.எல்.ஜி 2 | 2,50,000.00 |
| 59 | குருவிமலை | ஜே.எல்.ஜி 1 | 2,00,000.00 |
| 60 | குருவிமலை | ஜே.எல்.ஜி 2 | 2,05,000.00 |
| | | மொத்தம் | 66,85,000.00 |
| | | வாலாஜாபாத் ஒன்றியம் | |
| 61 | சிறுவள்ளூர் | முல்லை மகளிர் குழு | 2,20,000.00 |
| 62 | சிறுவள்ளூர் | வெற்றி மகளிர் குழு | 2,20,000.00 |
| 63 | சிறுவள்ளூர் | சத்யஜோதி மகளிர் குழு | 5,10,000.00 |
| 64 | கௌரியம்மன் பேட்டை | மலர்கள் மகளிர் குழு | 3,60,000.00 |
| 65 | சிறுவாக்கம் | அன்னை தெரசா மகளிர் குழு | 2,60,000.00 |
| 66 | சிறுவாக்கம் | வசந்தம் மகளிர் குழு | 6,30,000.00 |
| 67 | தர்மநாயக்கன்பட்டறை | கலைமகள் மகளிர் குழு | 9,35,000.00 |
| 68 | பாரதி நகர் | பனிமலர் மகளிர்குழு | 6,95,000.00 |
| 69 | பாரதி நகர் | அன்னை மகளிர் குழு | 6,45,000.00 |
| 70 | காரை | தங்கமங்கை மகளிர் குழு | 2,40,000.00 |
| 71 | காரை | செம்பருத்தி மகளிர் குழு | 2,40,000.00 |
| 72 | காரை | மரகதவீணை மகளிர் குழு | 1,60,000.00 |
| 73 | ஏனாத்தூர் | தீபம் மகளிர் குழு | 3,45,000.00 |
| 74 | ஏனாத்தூர் | பாரதி மகளிர் குழு | 5,40,000.00 |
| 75 | ஏனாத்தூர் புதுநகர் | சூரியகாந்தி மகளிர் குழு | 6,20,000.00 |
| | | மொத்தம் | 66,20,000.00 |
| | | அச்சிறுப்பாக்கம் ஒன்றியம் | |
| 76 | அகிலி | மல்லிகை மகளிர் குழு | 9,15,000.00 |
| 77 | அகிலி | ரோஜா மகளிர் குழு | 2,40,000.00 |
| 78 | மோகல்வாடி | ஜே.எல்.ஜி | 2,60,000.00 |
| 79 | மோகல்வாடி | ஜே.எல்.ஜி | 2,80,000.00 |
| 80 | காட்டுக்கரணை | சாமந்தி மகளிர் குழு | 9,25,000.00 |
| 81 | காட்டுக்கரணை | தாழம்பூ | 6,80,000.00 |
| 82 | காட்டுக்கரணை | தாழம்பூ 2 | 6,60,000.00 |
| 83 | காட்டுக்கரணை | சி.ஆர்.டி.எஸ் மலர்கள் | 7,35,000.00 |
| 84 | மொறப்பாக்கம் | ரோஜா மகளிர் குழு | 3,60,000.00 |

| வ. எண் | கிராமம் | குழுவின் பெயர் | பெறப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 85 | கீழாமூர் | முல்லை மகளிர் குழு | 3.50.000.00 |
| மொத்தம் | | | 54,05,000.00 |
| உத்திரமேரூர் ஒன்றியம் | | | |
| 86 | கருவேப்பம்பூண்டி | பெண்கள் மகளிர் குழு | 5.24.000.00 |
| 87 | வளத்தோடு | வைரம் ஜே.எல்.ஜி | 2.00.000.00 |
| 88 | வளத்தோடு | சாமந்தி ஜே.எல்.ஜி | 1.60.000.00 |
| 89 | சிறுங்கொழி | ரோஜா ஜே.எல்.ஜி | 1.60.000.00 |
| 90 | சிறுங்கோழி | தாமரை ஜே.எல்.ஜி | 1.60.000.00 |
| 91 | உத்திரமேரூர் | செல்லியம்மன் ஜே.எல்.ஜி | 1.60.000.00 |
| 92 | நல்லூர் | ஜே.எல்.ஜி | 1.60.000.00 |
| 93 | விசூர் | செம்பருத்தி ஜே.எல்.ஜி | 1.20.000.00 |
| 94 | இராவத்தநல்லூர் | கல்பனா சாவ்லா மகளிர் குழு | 4.05.000.00 |
| 95 | ஆர்.என்.கண்டிகை | மல்லிகை ஜே.எல்.ஜி | 3.60.000.00 |
| 96 | ஆர்.என்.கண்டிகை | செவ்வந்தி ஜே.எல்.ஜி | 2.40.000.00 |
| 97 | ஆர்.என்.கண்டிகை | செம்பருத்தி ஜே.எல்.ஜி | 2.20.000.00 |
| 98 | ஆர்.என்.கண்டிகை | தாமரை ஜே.எல்.ஜி | 2.40.000.00 |
| 99 | ஆர்.என்.கண்டிகை | முல்லை 2 | 2.40.000.00 |
| 100 | ஆர்.என்.கண்டிகை | முல்லை 3 | 2.80.000.00 |
| மொத்தம் | | | 36,29,000.00 |

நாபின்ஸ் நுண்கடன் திட்டம்: (Nabfins)



| வ. எண் | கிராமம் | குழுவின் பெயர் | பெறப்பட்ட தொகை |
|---|---|---|---|
| | | திருக்கழுக்குன்றம் ஒன்றியம் | |
| 101 | நெரும்பூர் | அப்துல்கலாம் மகளிர் குழு | 6,00,000.00 |
| 102 | மேலவலம்பேட்டை | குறிஞ்சிமலர் ஜே.எல்.ஜி | 2,80,000.00 |
| 103 | மேலவலம்பேட்டை | அம்மன் மகளிர் குழு | 7,60,000.00 |
| 104 | மேலவலம்பேட்டை | மலர்கள் ஜே.எல்.ஜி | 1,60,000.00 |
| 105 | நல்லாத்தூர் | அன்னை தெரசா ஜே.எல்.ஜி | 2,80,000.00 |
| 106 | நல்லாத்தூர் | புதுவசந்தம் | 1,60,000.00 |
| | | மொத்தம் | 22,40,000.00 |
| | | காட்டாங்குளத்தூர் ஒன்றியம் | |
| 107 | பாலூர் | கார்மேகம் ஜே.எல்.ஜி | 2,00,000.00 |
| 108 | பாலூர் | வான்மதி ஜே.எல்.ஜி | 2,00,000.00 |
| 109 | பாலூர் | வான்மதி ஜே.எல்.ஜி 1 | 2,00,000.00 |
| 110 | மேல்மணப்பாக்கம் | குறிஞ்சி மலர் ஜே.எல்.ஜி 1 | 1,60,000.00 |
| 111 | நத்தம் | ஜான்சிராணி மகளிர் குழு | 2,95,000.00 |
| 112 | ஆயப்பாக்கம் | குங்குமம் மகளிர் குழு | 2,70,000.00 |
| 113 | குண்டூர் | துளசி ஜே.எல்.ஜி | 2,00,000.00 |
| 114 | மேல்மணப்பாக்கம் | ஓம்சக்தி மகளிர் குழு | 10,20,000.00 |
| 115 | இருங்குன்றபள்ளி | தாழம்பூ மகளிர் குழு | 8,90,000.00 |
| 116 | மேல்மணப்பாக்கம் | சிவசக்தி ஜே.எல்.ஜி | 2,00,000.00 |
| 117 | இருங்குன்றபள்ளி | மருதம் மகளிர் ஜே.எல்.ஜி | 8,25,000.00 |
| 118 | குண்டூர் | துளசி ஜே.எல்.ஜி 1 | 1,60,000.00 |
| 119 | இருங்குன்றபள்ளி | துளசி மகளிர் குழு | 4,60,000.00 |
| 120 | இருங்குன்றபள்ளி | தாமரை பூ மகளிர் குழு | 4,10,000.00 |
| 121 | ஆத்தூர் | ஆத்தூர் ஜே.எல்.ஜி | 2,00,000.00 |
| 122 | மேலச்சேரி | வசந்தம் ஜே.எல்.ஜி | 2,20,000.00 |
| 123 | மேல்மணப்பாக்கம் | சிகரம் ஜே.எஸ்.ஜி | 2,40,000.00 |
| 124 | மேல்மணப்பாக்கம் | ஜே.எல்.ஜி | 1,55,000.00 |
| | மொத்தம் | | 63,05,000.00 |
| | 10 ஒன்றியங்களின் மொத்த கடனுதவித்தொகை | | 4,91,79,000.00 |

## 5.சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டம்: (Community Based Rehablitation)

சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு என்பது சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் உத்தி ஆகும். மாற்றுத்திறனாளிகளின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்தல் மற்றும் சமூகத்தில் மாற்றுத்திறனாளிகளின் பங்கேற்பை உறுதி செய்தல், உள்ளூர் வளங்களைக் கொண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு சேவைகளை அணுகுதல், மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்கள் மற்றும் சமூகம் உள்ளிட்ட உள்நாட்டில் உள்ள வளங்களை பயன்படுத்தி உடல், மன, சமூக மற்றும் தொழில்சார்ந்த திறமைகளை முழுமையாகப் பெறுவதற்கும், மாற்றுத்திறனாளிகளின் உடல்நலம், வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் சமூக சேவைகளில் கவனம் செலுத்தும் விரிவான மறுவாழ்வு சேவைகளே சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டத்தின் முக்கிய அம்சமாகும். சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்துடன் இணைந்து இத்திட்டமானது செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய இரு மாவட்டங்களில் திருப்போரூர், வாலாஜாபாத் ஆகிய 2 ஒன்றியங்களிலும் 2 திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், 4 களப்பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட 85 கிராமங்களில் உள்ள 21 வகையான 945 மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### நோக்கம்:

ஒரு தனிமனிதனுக்கு சமுதாயத்தில் கிடைக்கும் அனைத்து உரிமைகளும் மாற்றுத் திறனாளிகளுக்கும் கிடைத்திட வழிவகை செய்தல்.

### கருப்பொருள்:

- சுகாதாரம் (Health)
- கல்வி (Education)
- வேலைவாய்ப்பு (Livelihood)
- சமூகம் (Social)
- மேம்பாடு (Empowernment)





சி.பி.ஆர் திட்டத்தின் மிக முக்கிய கூறுகளில் ஒன்றான சுகாதாரம், நோய்த்தடுப்பு, மருத்துவம் மற்றும் மருத்துவ பராமரிப்பு மூலம் மாற்றுத்திறனாளிகளின் ஆரோக்கியம், மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்தல் மற்றும் மறுவாழ்வு பணிகள் மூலம் சுகாதார சேவைகளை சரியான முறையில் பயன்படுத்தி உடல்நல மேம்பாட்டை உறுதி செய்தல் ஆகும்.

மாற்றுத்திறனாளிகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஆதரவான நல்ல சூழலை ஏற்படுத்தித்தருதல், மருத்துவ சிகிச்சை மற்றும் தொடர் கண்காணிப்பின் மூலம் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சமூகம் இணைந்து மாற்றுத்திறனாளிகளின் உடல் சார்ந்த மருத்துவ தேவைகளை பூர்த்திச்செய்து சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மூலம் மாற்றுத்திறனாளிகளின் நலன் பேணிக்காக்கப்படுகிறது. மேற்கண்ட சுகாதார தேவைகளைக் கொண்டு கடந்த ஓராண்டில் திட்ட கிராமங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு பெற்றுத்தரப்பட்ட சுகாதார நலன் சார்ந்த பணிகள் மற்றும் மருத்துவ உதவி உபகரணங்களின் விவரம் பின் வருமாறு:



## மாற்றுத்திறனாளிகளுக்கு பெற்றுத்தரப்பட்ட சுகாதார நலன் சார்ந்த பணிகள் மற்றும் மருத்துவ உதவி உபகரணங்களின் விவரம் பின்வருமாறு:



| வ. எண் | சுகாதார பணிகள் | பயனாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | காதொலிக் கருவி | 12 |
| 2 | ஊன்றுகோல் | 6 |
| 3 | சக்கர நாற்காலி | 7 |
| 4 | மூன்று சக்கரவண்டி | 4 |
| 5 | மாற்றுத்திறனாளி மருத்துவ சான்றிதழ் | 162 |
| 6 | மாற்றுத்திறனாளி தேசிய அடையாள அட்டை | 286 |
| 7 | பேச்சு (ம) உடலியக்க பயிற்சி | 23 |
| 8 | பார்வையற்றோருக்கான அலைபேசி | 2 |
| 9 | மனவளர்ச்சி குறைபாடுடையவர்களுக்கான வாழ்க்கைத்திறன் பயிற்சி | 45 |

## கல்வி (Education)

கல்வி என்பது மனிதனின் பிறப்பிலிருந்தே தொடங்குகிறது. அனைவருக்கும் கல்வி கற்கும் உரிமை உள்ளது. மாற்றுத்திறனாளி குழந்தைகள் சமூகத்தில் அவர்களுக்கான அடிப்படை கல்வியை பெறவும், கல்வி சார்ந்த தடைகளை தகர்ந்து அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் ஒருங்கிணைந்த கல்வியை அளிக்க முயற்சி செய்து முறையான (ம) முறைசாரா கல்வி மூலம் கல்வியை பரவலாக்கவும் பல்வேறு முயற்சிகள் சி.பி.ஆர் திட்டத்தின் மூலம் எடுக்கப்பட்டுள்ளது. அவையாவன,

- மாற்றுத்திறனாளி குழந்தைகளை பள்ளியில் சேர்த்தல்
- இடைநிற்றல் அற்ற கல்வியை உறுதி செய்தல்
- சிறப்பு ஆசிரியர்களைக் கொண்டு கல்வியளித்தல்
- பள்ளிகளில் தடைகளற்ற சூழலை ஏற்படுத்துதல்
- ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியை ஊக்குவித்தல்

மேற்கண்ட செயல்பாடுகளின் மூலம் 85 திட்ட கிராமங்களில் உள்ள 56 மாற்றுத்திறனாளி குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு கல்வி கற்று வருகின்றனர்.





## வாழ்வாதாரம் (Livelihood)

சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்டத்தின் மிக உயர்ந்த குறிக்கோளான மாற்றுத்திறனாளிகள் சுயமாக வாழ தேவையான சூழலை உருவாக்கித் தருதலை மையமாகக் கொண்டு மாற்றுத்திறனாளிகளுக்கான திறன் வளர்ப்பு பயிற்சிகள், சுய தொழில் முறைகள், வேலைவாய்ப்பை ஏற்படுத்தித்தருதல், அரசின் வேலைவாய்ப்பு இடஒதுக்கீட்டை பெற வழிகாட்டுதல், வேலைவாய்ப்பில் முன்னுரிமை, வலைப்பின்னல் மூலம் சந்தைபடுத்துதல், அரசின் உதவித் தொகைகளை பெறுதல், அரசு திட்டங்களை பெறுதல், வங்கிக்கடன், தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தில் மாற்றுத்திறனாளிகளை இணைத்து வருமானம் ஈட்ட வழிவகைகளை பெற்றுத் தருதல் போன்ற பணிகள் வாழ்வாதார மேம்பாட்டு பணிகளாக சி.பி.ஆர். திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## வாழ்வாதாரம் (Livelihood)





மேற்கண்ட திட்டங்களின் மூலம் கடந்த ஓராண்டில் முன்னெடுக்கப்பட்ட வாழ்வாதார பணிகள் பின் வருமாறு:

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைத்திட்டத்தில் பயன் பெற்றவர்கள் - 72 நபர்கள்
- மாற்றுத்திறனாளி உதவித்தொகை பெற்றவர்கள் - 86 நபர்கள்
- தனிநபர் கழிவறை திட்டம் பெற்றவர்கள் - 8 நபர்கள்
- பிரதம மந்திரியின் தொகுப்பு வீடு மற்றும் பசுமை வீடு கட்டும் திட்டத்தில் பயன் பெற்றவர்கள் - 5
- தையல் இயந்திரம் பெற்றவர்கள் - 7 நபர்கள்
- சுய தொழில் கடன் பெற்றவர்கள் - 16 நபர்கள்
- வங்கியின் மூலம் சுயதொழில் கடன் பெற்றவர்கள் - 23 நபர்கள்
- பராமரிப்பு உதவித்தொகை பெற்றவர்கள் - 34 நபர்கள்
- அரசின் மோட்டர் பொருத்தப்பட்ட இருசக்கர வாகனம் பெற்றவர்கள் - 3 நபர்கள்
- தனியார் நிறுவனம் மூலம் சுயதொழில் கடனுதவி பெற்றவர்கள் - 8 நபர்கள்

## சமூகம் (Social)

மாற்றுத்திறனாளிகளின் பங்கேற்பை அனைத்து நிலைகளிலும் உறுதி செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும். மாற்றுத்திறனாளிகளை குறித்த சமூக கண்ணோட்டங்களை தகர்த்தல், சமுதாய சூழலை ஏற்று மாற்றுத்திறனாளிகளையும் சமூகத்தின் அங்கத்தினர்களாக மாற்றுதல், குடும்ப விழாக்கள், கிராம நிகழ்வுகள், கிராம சபை கூட்டங்களில் பங்கேற்பு, மாற்றுத்திறனாளி-களுக்கான அரசின் சட்டங்களின் மூலம் அவர்களது உரிமை மற்றும் சலுகைகளை மீட்டெடுத்தல், சமூகத்தின் மக்களிடம் மனிதநேய பண்புகளை வளர்த்தல், போன்ற செயல்பாடுகளைக் கொண்டு மாற்றுத்திறனாளிகளின் வாழ்வியல் நிலையில் முன்னேற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



மாற்று திறனாளர் வளைகாப்பு விழா

இதன் ஒரு பகுதியாக டிசம்பர் 06 மற்றும் பிப்ரவரி 17-ம் தேதிகளில் அகில உலக மாற்றுத்திறனாளிகள் தினம் மற்றும் தமிழக அளவிலான காரிதாஸ் இந்தியாவின் வைரவிழாவானது சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தில் கொண்டாடப்பட்டது. சி.பி.ஆர் திட்ட பணியாளர்கள் செங்கல்பட்டு காஞ்சிபுரம் ஆகிய 2 மாவட்டங்களில் உள்ள திருப்போரூர், வாலாஜாபாத், காட்டாங்கொளத்தூர், திருக்கழுக்குன்றம் ஆகிய 4 ஒன்றியங்களின் மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்புகள் இணைந்து இவ்விழாவை சிறப்பித்தனர். இவ்விழாவிற்கு காரிதாஸ் இந்தியாவின் துணை இயக்குநர் அருட்பணி. ஜாலி புத்தன்புரா, காரிதாஸ் இந்தியா - வள ஆலோசகர் திரு. சூசை, செங்கல்பட்டு மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திருமதி. செந்தில்குமாரி, செங்கல்பட்டு மறைமாவட்ட ஆயர் மேதகு. டாக்டர். நீதிநாதன், சி.ஆர்.டி.எஸ் இயக்குநர் முனைவர். இ. அந்தோணிராஜ், பங்கு அருட்பணியாளர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாற்றுத்திறனாளிகள் என 500க்கும் மேற்பட்டோர் இவ்விழாவில் கலந்துக்கொண்டனர்.

## மேம்பாடு (Empowernment)

சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு திட்ட பகுதிகளில் உள்ள 85 மாற்றுத்திறனாளி குழுக்களில் உள்ள 986 மாற்றுத்திறனாளிகள் ஒன்றியம் வாரியாக இணைந்து திருப்போரூர் ஒன்றிய மாற்றுத்திறனாளி கூட்டமைப்பு (ம) வாலாஜாபாத் ஒன்றிய மாற்றுத்திறனாளி கூட்டமைப்பு என இரு ஒன்றிய கூட்டமைப்பு உறுப்பினர்களாக இணைந்து மாற்றுத்திறனாளிகளின் தேவைகள், உரிமை சார்ந்த செயல்பாடுகளை தாங்களே முன்னெடுத்துச் செல்கின்றனர். தற்போது ஒன்றிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒன்றிய கூட்டமைப்புகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.









குறைதீர்க்கும் நாளில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகளின் அலுவலரிடம், பார்வைதிறனற்ற மாற்றுதிறனாளியின் விண்ணப்பம் பெற்றுக்கொள்ளும் நிகழ்வு

## 6.காரிதாஸ் இந்தியாவின் எழுவோம் இயக்கம் – புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரத் திட்டம் (Ezhuvom Iyakam - Cancer Awarness Program)

காரிதாஸ் இந்தியாவின் எழுவோம் இயக்கம் எனும் புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரத் திட்டம் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் வழியாக 3 ஆண்டுகளாக சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. புற்றுநோய் காரணமாக இறப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் காரிதாஸ் இந்தியாவுடன் இணைந்து புற்றுநோயாளர்களுக்கான பாதிப்பை குறைக்கவும், புற்றுநோயற்ற சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடன் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய இரு மாவட்டங்களில் உள்ள 18 கிராமங்களை தேர்ந்தெடுத்து கிராமப்புற மக்களிடையே புற்றுநோய் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றோம்.

இயற்கையை பேணிக்காப்பது வழியாக பேரிடரைக் குறைத்தல் மற்றும் புற்றுநோய்க்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சார துவக்க விழாவானது 29.11.2022 அன்று காலை 10 மணியளவில் காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஒன்றியத்தில் உள்ள தூய இருதய அன்னை ஆலய வளாகத்திலுள்ள A.K.P திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சி. ஜான்சன் டேவிட் (மருத்துவர் - சித்த மருத்துவம்) அவர்கள் கலந்துக்கொண்டு புற்றுநோய்க்கான காரணங்கள், அறிகுறிகள், மருத்துவ ஆலோசனைகளை வழங்கினார். தொடர்ந்து புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரத் திட்டத்தின் நோக்கம் செயல்பாடுகள் பகிர்ந்துக்கொள்ளப்பட்டது. இந்நிகழ்விற்கு வாலாஜாபாத், உத்திரமேரூர், காஞ்சிபுரம் ஒன்றிய பொதுமக்கள் 300 பேர் கலந்துக்கொண்டு புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை பெற்றனர்.

### புற்றுநோய்க்கு எதிரான கையெழுத்து பிரச்சாரம்:

புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை பரவலாக்கும் விதமாக 04.02.2023 அன்று உத்திரமேரூர் பேருந்து நிலையம், மதுராந்தகம் பேருந்து நிலையம் மற்றும் செங்கல்பட்டு பேருந்து நிலையம் ஆகிய 3 இடங்களில் உலக புற்றுநோய் தினம் அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்வில் துண்டு பிரசுரங்கள் வழியாக புற்றுநோய் குறித்த தகவல்கள் பொதுமக்களிடம் பகிரப்பட்டது. தொடர்ந்து 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் புற்றுநோய்க்கு எதிரான கையொப்பமிடும் பிரச்சாரத்திலும் கலந்துக்கொண்டு புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை பெற்றனர்.

### மருத்துவ முகாம்:

21.02.2023 அன்று சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் மற்றும் சென்னை எஸ்.ஆர்.எம் மருத்துவமனையுடன் இணைந்து உத்திரமேரூர் ஒன்றியம் வேடந்தாங்கல் ஊராட்சிக்குட்பட்ட ஒட்டந்தாங்கல் கிராமத்தில் பொது மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இச்சிறப்பு மருத்துவ முகாமில் கண், காது, மூக்கு, தொண்டை, பல், எலும்பு, நரம்பியல், குழந்தை நலம், மகப்பேறு மருத்துவம் என சிறப்பு மருத்துவர்கள் கலந்துக்கொண்டு நோயாளிகளுக்கு மருத்துவ பரிசோதனையின் அடிப்படையில் இலவசமாக மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டன. மேலும் பொது மருத்துவர்களும் கலந்துக்கொண்டு ஏழை, எளிய கிராமப்புற மக்களுக்கான மருத்துவ உதவிகளை செய்தனர். இம்முகாமில் பரிசோதனையின் அடிப்படையில் மேல்சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு எஸ்.ஆர்.எம் மருத்துவமனையில் இலவச சிகிச்சையளிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. 200க்கும் மேற்பட்ட நோயாளிகள் இம்முகாமில் கலந்துக்கொண்டு பயனடைந்தனர்.



புற்றுநோய் விழிப்புணர்வு பேரணி காந்தி நகர்


எழுவோம் இயக்கம் – புற்றுநோய் விழிப்புணர்வு பணிக்கான நன்கொடை திரட்டுதல்



எழுவோம் இயக்கம் – புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரம்

## புற்றுநோயாளிகளுக்கான கிறிஸ்துமஸ் விழா:

20.12.2022 அன்று சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிறிஸ்துமஸ் பரிசுபொருட்கள் வழங்கும் விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் 18 திட்டகிராமங்களைச் சேர்ந்த 17 புற்றுநோயாளிகள் கலந்துக்கொண்டு பரிசு பொருட்களைப் பெற்று கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடினர். இந்நிகழ்வில் செங்கல்பட்டு மறைமாவட்ட ஆயர் மேதகு. டாக்டர். A. நீதிநாதன், ஆயரின் பொதுபதில்குரு பேரருட்தந்தை. ஜான்போஸ்கோ, மேய்ப்பு பணி நிலைய இயக்குநர் பணி. இயேசு அந்தோணி மற்றும் சி.ஆர்.டி.எஸ் இயக்குநர் முனைவர். இ. அந்தோணிராஜ் ஆகியோர் கலந்துக்கொண்டு பயனாளிகளுக்கு பரிசுபொருட்களை வழங்கினார்கள்.

## புற்றுநோய் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி:

சி.ஆர்.டி.எஸ் நிறுவனம், குரோம்பேட்டை வைஷ்ணவா மகளிர் கல்லூரி மாணவிகள் மற்றும் சுற்றுப் பகுதிகளில் உள்ள பள்ளி மாணவ மாணவிகள் ஒன்றிணைந்து வாலாஜாபாத் ஒன்றியம் உள்ளாவூர் கிராமத்தில் உள்ள மக்களிடையே பதாகைகளை ஏந்தியும், கோஷங்கள் மற்றும் துண்டு பிரசுரங்களை வழங்கியும் புற்றுநோய்க்கு எதிரான விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் புகையிலை பயன்பாடு, போதைபொருள் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் விழிப்புணர்வு அளிக்கப்பட்டது.

## காரிதாஸ் இந்தியா – பசிப்பிணி நிதி திரட்டுதல்:

காரிதாஸ் இந்தியா - பசிப்பிணிக்கு எதிரான நிதி திரட்டும் நோக்கத்திற்காக செங்கல்பட்டு மறைமாவட்டம் பாலவாக்கம் மறைவட்டம், பாலவாக்கம் கடற்கரை புனித அந்தோணியார் திருத்தலத்தில் பசிப்பிணிக்கு எதிரான நிதி திரட்டும் பிரச்சாரம் மற்றும் ஞாயிறு சிறப்புத் திருப்பலியானது சி.ஆர்.டி.எஸ் இயக்குநர் முனைவர் இ. அந்தோணிராஜ் (ம) திருத்தல அதிபர் லியோ டோமினிக் அவர்களால் நிறைவேற்றப்பட்டது. சி.ஆர்.டி.எஸ் பணியாளர்கள் அனைவரும் பிரச்சாரத்தில் கலந்துக் கொண்டு பசிப்பிணிக்கான நிதி திரட்டும் பணியை மேற்கொண்டனர்.

## 7.பெண்கள் கூட்டமைப்பு:

தமிழக சமூகப்பணி மையம் டாசோஸ் வழிகாட்டுதலுடன் காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் 10 ஒன்றியங்களில் உள்ள பெண்கள் ஒருங்கிணைக்கப்பட்டு கூட்டமைப்பாக செயல்பட்டுக்கொண்டிருந்த சூழலில் தற்போது செங்கல்பட்டு, காஞ்சிபுரம் இரண்டு மாவட்டங்களாக பிரிக்கப்பட்டு இரண்டு கூட்டமைப்பு பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டு தனித்தனி இயக்கங்களாக செயல்பட்டு வருகிறன. அவ்வியக்கங்கள் பெண்களின் வாழ்வாதாரம், பொருளாதாரம், மற்றும் உரிமைகளை மீட்டெடுக்கும் நோக்கத்திற்காக துவங்கப்பட்டு 106 ஊராட்சிகளில் உள்ள 167 கிராமங்களில் 546 குழுக்களுடன் 7358 உறுப்பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

## இயக்கத்தின் நோக்கம்:

- சமுதாய வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள, ஒடுக்கப்பட்ட பெண்கள் ஒன்றுபட்டு சமூக, பொருளாதார அரசியல், கல்வி, கலாச்சாரம் மற்றும் சட்ட ரீதியான நிலைகளில் முழு ஈடுபாடு கொண்டு வாழ்வில் முன்னேற துணைபுரிதல்.
- பெண்களிடையே கூட்டமைப்பின் முக்கியத்துவம் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தி பெண்களுக்கான உரிமைகளை பெறவும், சமுதாய முன்னேற்றத்திற்கு வழிகாட்டவும் ஆர்வத்தை ஏற்படுத்துதல்.
- சமூக பிரச்சினைகளின் அடிப்படை காரணங்களை ஆராய்ந்து அவற்றை தவிர்பதற்காக வழிவகுத்தல்.
- அரசு அதிகாரிகளுடன் சமூக உறவை ஏற்படுத்தி பெண்களுக்கு தேவையான உதவிகள் மற்றும் சலுகைகளையும் அரசிடமிருந்து பெற்றுத்தருதல்.
- சமூகத்தில் நலிவுற்ற பெண்களின் நிலையை உயர்த்தவும், அரசியலிலும், நிர்வாக பொறுப்புகளிலும் பெண்கள் பங்கெடுக்கவும் கூட்டமைப்பு உறுப்பினர்களை வலுப்படுத்துதல்.
- பெண்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் ஒத்த சிந்தனையுள்ள பிற அமைப்புகளுடன் இணைந்து செயல்படுதல்.
- அரசு வங்கிகள் மற்றும் தனியார் நிதி நிறுவனங்களின் மூலம் நேரடிக்கடன் பெற்று சுயதொழில் செய்து பெண்களை வாழ்வாதாரத்தில் உயர்த்துதல்.
- பெண்களுக்கு பாலின சமத்துவத்தின் முக்கியத்துவத்தை அறிய செய்து பெண்களை சுயசார்பு நிலைக்கு உயர்த்துதல்.

## செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட கூட்டமைப்புகளின் கீழ் செயல்படும் குழுக்களின் விவரம்

| வ. எண் | ஒன்றியம் | பஞ்சாயத்து | கிராமம் | குழுக்கள் | உறுப்பினர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | திருப்போரூர் | 10 | 14 | 69 | 884 |
| 2 | உத்திரமேரூர் | 16 | 28 | 79 | 1124 |
| 3 | காட்டாங்கொளத்தூர் | 10 | 14 | 47 | 645 |
| 4 | வாலாஜாபாத் | 6 | 15 | 50 | 623 |
| 5 | இலத்தூர் | 8 | 9 | 37 | 496 |
| 6 | மதுராந்தகம் | 6 | 17 | 35 | 532 |
| 7 | சித்தாமூர் | 7 | 8 | 18 | 258 |
| 8 | காஞ்சிபுரம் | 12 | 17 | 65 | 858 |
| 9 | திருக்கழுக்குன்றம் | 9 | 13 | 47 | 611 |
| 10 | அச்சிறுப்பாக்கம் | 15 | 19 | 64 | 979 |
| 11 | கடற்கரை பகுதி | 7 | 13 | 35 | 348 |
| | மொத்தம் | 106 | 167 | 546 | 7358 |

## சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்புகளின் வழியாக நேரடிக்கடன் பெற்ற குழுக்களின் விவரம்:

| வ. எண் | ஒன்றியம் | கிராமம் | குழு | வங்கி | கடன் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | வாலாஜாபாத் | ஒனத்தூர் | தீபம் | இந்தியன் வங்கி - ஒனத்தூர் | 10,00,000.00 |
| 2 | வாலாஜாபாத் | வாலாஜாபாத் | விடிவெள்ளி | இந்தியன் வங்கி - ஒனத்தூர் | 10,00,000.00 |
| 3 | வாலாஜாபாத் | வாலாஜாபாத் | ஓம்சரவணா | இந்தியன் வங்கி - ஒனத்தூர் | 7,00,000.00 |
| 4 | வாலாஜாபாத் | சிறுவள்ளூர் | செம்மொழி | கனரா வங்கி - பரந்தூர் | 10,00,000.00 |
| 5 | வாலாஜாபாத் | சிறுவள்ளூர் | புதுவசந்தம் | கனரா வங்கி - பரந்தூர் | 7,00,000.00 |
| 6 | வாலாஜாபாத் | வையாவூர் | தமிழன்னை | கூட்டுறவு வங்கி - வையாவூர் | 5,00,000.00 |
| 7 | வாலாஜாபாத் | பாரதிநகர் | அன்னை | கூட்டுறவு வங்கி - காஞ்சிபுரம் | 3,00,000.00 |
| 8 | வாலாஜாபாத் | தர்மநாயக்கன்பட்டரை | முல்லை | கூட்டுறவு வங்கி - காஞ்சிபுரம் | 3,20,000.00 |
| 9 | வாலாஜாபாத் | சிறுவாக்கம் | இசைத்தமிழ் | இந்தியன் வங்கி - ஒனத்தூர் | 8,50,000.00 |
| 10 | வாலாஜாபாத் | புதுகாலனி | புதுவசந்தம் | இந்தியன் வங்கி - ஒனத்தூர் | 9,00,000.00 |
| 11 | வாலாஜாபாத் | ஒனத்தூர் | மந்தாரை | இந்தியன் வங்கி - ஒனத்தூர் | 6,50,000.00 |
| 12 | வாலாஜாபாத் | ஒனத்தூர் | புரட்சி | இந்தியன் வங்கி - ஒனத்தூர் | 9,00,000.00 |
| 13 | வாலாஜாபாத் | ஒனத்தூர் | காவேரி | இந்தியன் வங்கி - ஒனத்தூர் | 9,00,000.00 |
| 14 | காட்டாங்கொளத்தூர் | மேல்மணப்பாக்கம் | குறிஞ்சி | கூட்டுறவு வங்கி - பாலூர் | 5,67,000.00 |
| 15 | காட்டாங்கொளத்தூர் | பாலூர் | ஸ்ரீ காலம் | கூட்டுறவு வங்கி பாலூர் | 3,60,000.00 |
| 16 | காட்டாங்கொளத்தூர் | பாலூர் | நர்மதா | கூட்டுறவு வங்கி பாலூர் | 3,60,000.00 |
| 17 | காட்டாங்கொளத்தூர் | ஆப்பாக்கம் | செவ்வந்தி | கனரா வங்கி - வாயலூர் | 10,00,000.00 |
| 18 | காட்டாங்கொளத்தூர் | ஆப்பாக்கம் | மல்லி | கனரா வங்கி - வாயலூர் | 10,00,000.00 |
| 19 | காட்டாங்கொளத்தூர் | ஆப்பாக்கம் | விடிவெள்ளி | கனரா வங்கி - வாயலூர் | 10,00,000.00 |
| 20 | காட்டாங்கொளத்தூர் | ஆப்பாக்கம் | பூவாசம் | கனரா வங்கி - வாயலூர் | 6,40,000.00 |
| 21 | இலத்தூர் | கூடலூர் | செண்பக பூ | கனரா வங்கி - கொடூர் | 5,00,000.00 |
| 22 | இலத்தூர் | கூடலூர் | செம்பருத்தி | கனரா வங்கி - கொடூர் | 5,00,000.00 |
| 23 | இலத்தூர் | கூடலூர் | மகிழம் பூ | கனரா வங்கி - கொடூர் | 5,00,000.00 |
| 24 | இலத்தூர் | கொடூர் | பட்டுரோஜா | கனரா வங்கி - கொடூர் | 2,00,000.00 |
| 25 | இலத்தூர் | பகவரத்தம் | கடர் | ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா - பவுஞ்சூர் | 5,00,000.00 |
| 26 | அச்சிறுப்பாக்கம் | காட்டுக்கரணை | சி.ஆர்.டி.எஸ் மலர்கள் | இந்தியன் வங்கி - ராமாபுரம் | 8,00,000.00 |
| 27 | அச்சிறுப்பாக்கம் | மொறப்பாக்கம் | முல்லை | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி - மதுராந்தகம் | 7,80,000.00 |
| 28 | அச்சிறுப்பாக்கம் | முனியந்தாங்கல் | முல்லை | இந்தியன் வங்கி - ராமாபுரம் | 8,00,000.00 |
| 29 | அச்சிறுப்பாக்கம் | லைப்பாக்கம் | ஞான ஒளி | இந்தியன் வங்கி - ராமாபுரம் | 1,00,000.00 |
| 30 | அச்சிறுப்பாக்கம் | உத்தமநல்லூர் | ரோஜா | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி - அச்சிறுப்பாக்கம் | 5,00,000.00 |

## சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்புகளின் வழியாக நேரடிக்கடன் பெற்ற குழுக்களின் விவரம்:

| வ. எண் | ஒன்றியம் | கிராமம் | குழு | வங்கி | கடன் தொகை |
|---|---|---|---|---|---|
| 31 | அச்சிறுப்பாக்கம் | மாத்தூர் | ரோஜா | இந்தியன் வங்கி - ராமாபுரம் | 8,00,000.00 |
| 32 | அச்சிறுப்பாக்கம் | மோகல்வாடி | உதயம் | இந்தியன் வங்கி - ராமாபுரம் | 3,00,000.00 |
| 33 | அச்சிறுப்பாக்கம் | காட்டுக்கரணை | சாமந்தி | இந்தியன் வங்கி - ராமாபுரம் | 15,00,000.00 |
| 34 | அச்சிறுப்பாக்கம் | காட்டுக்கரணை | செந்தூரம் | இந்தியன் வங்கி - ராமாபுரம் | 3,00,000.00 |
| 35 | அச்சிறுப்பாக்கம் | காட்டுக்கரணை | செம்பருத்தி | இந்தியன் வங்கி - ராமாபுரம் | 3,00,000.00 |
| 36 | அச்சிறுப்பாக்கம் | திருமுக்காடு | தீபச்சுடர் | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - அச்சிறுப்பாக்கம் | 4,00,000.00 |
| 37 | அச்சிறுப்பாக்கம் | திருமுக்காடு | அன்புச் சுடர் | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - அச்சிறுப்பாக்கம் | 4,00,000.00 |
| 38 | அச்சிறுப்பாக்கம் | திருமுக்காடு | தாய்மைச் சுடர் | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - அச்சிறுப்பாக்கம் | 4,00,000.00 |
| 39 | அச்சிறுப்பாக்கம் | உத்தமநல்லூர் | டாக்டர் அம்பேத்கார் | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - அச்சிறுப்பாக்கம் | 4,00,000.00 |
| 40 | அச்சிறுப்பாக்கம் | உத்தமநல்லூர் | தாமரை | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - அச்சிறுப்பாக்கம் | 4,00,000.00 |
| 41 | அச்சிறுப்பாக்கம் | உத்தமநல்லூர் | முல்லை | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - அச்சிறுப்பாக்கம் | 4,00,000.00 |
| 42 | அச்சிறுப்பாக்கம் | உத்தமநல்லூர் | அன்னை தெரசா | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - அச்சிறுப்பாக்கம் | 4,00,000.00 |
| 43 | அச்சிறுப்பாக்கம் | உத்தமநல்லூர் | செவ்வந்தி | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - அச்சிறுப்பாக்கம் | 4,00,000.00 |
| 44 | அச்சிறுப்பாக்கம் | உத்தமநல்லூர் | தீபம் | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - அச்சிறுப்பாக்கம் | 4,00,000.00 |
| 45 | அச்சிறுப்பாக்கம் | உத்தமநல்லூர் | ரோஜா | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - அச்சிறுப்பாக்கம் | 4,00,000.00 |
| 46 | அச்சிறுப்பாக்கம் | திம்மாபுரம் | உதயம் | இந்தியன் வங்கி - அச்சிறுப்பாக்கம் | 25,000.00 |
| 47 | அச்சிறுப்பாக்கம் | திம்மாபுரம் | விடியல் | இந்தியன் வங்கி - அச்சிறுப்பாக்கம் | 25,000.00 |
| 48 | உத்திரமேரூர் | அம்மையப்பநல்லூர் | இமயம் | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - உத்திரமேரூர் | 6,00,000.00 |
| 49 | உத்திரமேரூர் | அம்மையப்பநல்லூர் | அப்துல்கலாம் | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - உத்திரமேரூர் | 12,00,000.00 |
| 50 | உத்திரமேரூர் | அம்மையப்பநல்லூர் | அன்னை சாரதாதேவி | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - உத்திரமேரூர் | 8,00,000.00 |
| 51 | உத்திரமேரூர் | அம்மையப்பநல்லூர் | செம்மொழி | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - உத்திரமேரூர் | 4,00,000.00 |
| 52 | உத்திரமேரூர் | பெருங்கோழி | சூசையப்பர் | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - உத்திரமேரூர் | 12,00,000.00 |
| 53 | உத்திரமேரூர் | பெருங்கோழி | ஆரோக்கியமாதா | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - உத்திரமேரூர் | 9,00,000.00 |
| 54 | உத்திரமேரூர் | உத்திரமேரூர் | அன்னை | இந்தியன் வங்கி - உத்திரமேரூர் | 3,90,000.00 |
| 55 | உத்திரமேரூர் | நல்லூர் | வெற்றி அன்னை | இந்தியன் வங்கி - உத்திரமேரூர் | 4,00,000.00 |
| 56 | உத்திரமேரூர் | நல்லூர் | வெற்றி அன்னை | இந்தியன் வங்கி - உத்திரமேரூர் | 10,00,000.00 |
| 57 | உத்திரமேரூர் | அம்மையப்பநல்லூர் | மல்லிகை | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - உத்திரமேரூர் | 4,50,000.00 |
| 58 | உத்திரமேரூர் | அம்மையப்பநல்லூர் | ஏ.பி.ஜே.அப்துல் கலாம் | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - உத்திரமேரூர் | 4,50,000.00 |
| 59 | உத்திரமேரூர் | அம்மையப்பநல்லூர் | பெண்கள் முன்னேற்றம் | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - உத்திரமேரூர் | 6,00,000.00 |

## சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்புகளின் வழியாக நேரடிக்கடன் பெற்ற குழுக்களின் விவரம்:

| வ. எண் | ஒன்றியம் | கிராமம் | குழுவின் பெயர் | வங்கி | கடன்தொகை |
|---|---|---|---|---|---|
| 60 | உத்திரமேரூர் | அம்மையப்பநல்லூர் | துலுக்காணத்தம்மன் | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - உத்திரமேரூர் | 5,00,000.00 |
| 61 | உத்திரமேரூர் | உத்திரமேரூர் | ஸ்ரீ காமாட்சி | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - உத்திரமேரூர் | 7,00,000.00 |
| 62 | உத்திரமேரூர் | உத்திரமேரூர் | ரோஜா | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - உத்திரமேரூர் | 7,00,000.00 |
| 63 | உத்திரமேரூர் | உத்திரமேரூர் | தென்றல் | இந்தியன் ஓவர்சிஸ் வங்கி - உத்திரமேரூர் | 10,50,000.00 |
| 64 | காஞ்சிபுரம் | குருவிமலை | அன்னை தெரசா | காஞ்சி மத்திய கூட்டுறவு வங்கி - காஞ்சிபுரம் | 90,000.00 |
| 65 | காஞ்சிபுரம் | பாலமடை | இமயம் | தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி- காஞ்சிபுரம் | 4,50,000.00 |
| 66 | காஞ்சிபுரம் | பாலமடை | புன்னகை | தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி- காஞ்சிபுரம் | 4,50,000.00 |
| 67 | காஞ்சிபுரம் | பாலமடை | விநாயகர் | தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி- காஞ்சிபுரம் | 4,50,000.00 |
| 68 | காஞ்சிபுரம் | திருபருத்திக்குன்றம் | அறிஞர் அண்ணா | காஞ்சி மத்திய கூட்டுறவு வங்கி - காஞ்சிபுரம் | 6,30,000.00 |
| 69 | திருக்கழுக்குன்றம் | சட்ராஸ் மாதா கோவில் | செம்பருத்தி | கனரா வங்கி - சட்ராஸ் | 9,00,000.00 |
| 70 | திருக்கழுக்குன்றம் | சட்ராஸ் மாதா கோவில் | முல்லை | கனரா வங்கி | 9,00,000.00 |
| 71 | திருக்கழுக்குன்றம் | சட்ராஸ் மாதா கோவில் | ரோஜா | கனரா வங்கி | 9,00,000.00 |
| 72 | திருக்கழுக்குன்றம் | புதுப்பட்டினம் குப்பம் | மல்லி | கனரா வங்கி | 9,00,000.00 |
| 73 | திருக்கழுக்குன்றம் | கொக்கிலமேடு | மகாலட்சுமி | இைந்தியன் ஓவர்சிஸ் வங்கி - மகாபலிபுரம் | 3,00,000.00 |
| 74 | திருக்கழுக்குன்றம் | தழுதாளிகுப்பம் | ரோஜா | இந்தியன் வங்கி - இடைக்கழிநாடு | 2,40,000.00 |
| 75 | திருக்கழுக்குன்றம் | தழுதாளிகுப்பம் | பர்வத பெண்கள் | இந்தியன் வங்கி - இடைக்கழிநாடு | 2,40,000.00 |
| 76 | திருக்கழுக்குன்றம் | தழுதாளிகுப்பம் | சிங்கப்பெண்கள் | இந்தியன் வங்கி - இடைக்கழிநாடு | 2,40,000.00 |
| 77 | திருக்கழுக்குன்றம் | நல்லாத்தூர் | தண்டுமாரியம்மன் | இந்தியன் வங்கி - வாயலூர் | 4,80,000.00 |
| 78 | திருக்கழுக்குன்றம் | நல்லாத்தூர் | பண்ணை | இந்தியன் வங்கி - வாயலூர் | 5,60,000.00 |
| 79 | மதுராந்தகம் | கே.கே.புதூர் | டாக்டர்.அம்பேத்கார் | பாரத ஸ்டேட் பேங்க் - கருங்குழி | 8,00,000.00 |
| 80 | மதுராந்தகம் | மலைப்பாளையம் | புரட்சி பெண்கள் | பாரத ஸ்டேட் பேங்க் - கருங்குழி | 6,00,000.00 |
| 81 | சித்தாமூர் | கீழ்மருவத்தூர் | கலைமகள் | சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா - மேல்மருவத்தூர் | 5,60,000.00 |
| 82 | சித்தாமூர் | பெரிய களக்காடி | செம்மொழி | கனரா வங்கி - கயப்பாக்கம் | 14,00,000.00 |
| 83 | சித்தாமூர் | தண்டலம் | குபேரன் | கனரா வங்கி - கயப்பாக்கம் | 10,00,000.00 |
| 84 | சித்தாமூர் | தேன்பாக்கம் | பெண்கள் மேம்பாட்டுச் சங்கம் | இந்தியன் வங்கி - கடப்பாக்கம் | 9,90,000.00 |
| 85 | சித்தாமூர் | கீழ்மருவத்தூர் | மகாத்மா காந்தி | சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா - மேல்மருவத்தூர் | 10,00,000.00 |
| 86 | சித்தாமூர் | கீழ்மருவத்தூர் | தாமரை | சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா - மேல்மருவத்தூர் | 6,00,000.00 |
| 87 | திருப்போரூர் | ஆலத்தூர் | அல்லி | இந்தியன் வங்கி - திருப்போரூர் | 2,00,000.00 |
| 88 | திருப்போரூர் | ஆலத்தூர் | தேவதை | இந்தியன் வங்கி - திருப்போரூர் | 2,00,000.00 |
| 89 | திருப்போரூர் | ஒரகடம் | அன்னை அஞ்சுகம் | ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா - கேளம்பாக்கம் | 2,00,000.00 |

## சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்புகளின் வழியாக நேரடிக்கடன் பெற்ற குழுக்களின் விவரம்:

| வ. எண் | ஒன்றியம் | கிராமம் | குழு | வங்கி | கடன் தொகை |
|---|---|---|---|---|---|
| 90 | திருப்போரூர் | கேளம்பாக்கம் | ஜான்சிராணி | சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா - கேளம்பாக்கம் | 12,00,000.00 |
| 91 | திருப்போரூர் | கேளம்பாக்கம் | முல்லை | சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா - கேளம்பாக்கம் | 12,00,000.00 |
| 92 | திருப்போரூர் | கேளம்பாக்கம் | ரோஜா | சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா - கேளம்பாக்கம் | 12,00,000.00 |
| 93 | திருப்போரூர் | கேளம்பாக்கம் | செவ்வந்தி | சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா - கேளம்பாக்கம் | 12,00,000.00 |
| 94 | திருப்போரூர் | கேளம்பாக்கம் | செம்பருத்தி | சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா - கேளம்பாக்கம் | 12,00,000.00 |
| 95 | திருப்போரூர் | கேளம்பாக்கம் | குறிஞ்சிமலர் | சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா - கேளம்பாக்கம் | 12,00,000.00 |
| 96 | திருப்போரூர் | கேளம்பாக்கம் | செந்தூர பூ | சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா - கேளம்பாக்கம் | 12,00,000.00 |
| 97 | திருப்போரூர் | கேளம்பாக்கம் | மரிக்கொழுந்து | சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா - கேளம்பாக்கம் | 12,00,000.00 |
| 98 | திருப்போரூர் | கேளம்பாக்கம் | இந்திராகாந்தி | சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா - கேளம்பாக்கம் | 12,00,000.00 |
| 99 | திருப்போரூர் | கேளம்பாக்கம் | ஜான்சிராணி | சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா - கேளம்பாக்கம் | 12,00,000.00 |
| மொத்தம் (ஆறு கோடியே அறுபத்து நான்கு இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரம்) | | | | | **6,64,97,000** |

## சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்புகள் வழியாக அரசு திட்டங்கள் பெற்றவர்கள்:

| வ. எண் | அரசு திட்டங்கள் | பயனாளிகள் |
|---|---|---|
| 1 | அரசு இலவச கறவைமாடு திட்டம் | 52 நபர்கள் |
| 2 | அரசு இலவச ஆடு வளர்ப்புத்திட்டம் | 91 நபர்கள் |
| 3 | முதியோர் உதவித்தொகை திட்டம் | 66 நபர்கள் |
| 4 | தேசிய ஊரக வேலைவாய்ப்புத்திட்டம் | 266 நபர்கள் |
| 5 | மாட்டு கொட்டகை அமைத்தல் திட்டம் | 42 நபர்கள் |
| 6 | அரசு இலவச பட்டா | 184 நபர்கள் |
| 7 | உறிஞ்சி குழி அமைத்தல் | 222 நபர்கள் |
| 8 | இரண்டு பெண்குழந்தைகள் திட்டம் | 9 நபர்கள் |
| 9 | தனிநபர் கழிவறைத்திட்டம் | 138 நபர்கள் |
| 10 | தொகுப்பு வீடு திட்டம் | 119 நபர்கள் |
| 11 | விதவைகள் மாதாந்திர உதவித்தொகை | 46 நபர்கள் |
| 12 | தையல் இயந்திரம் | 40 நபர்கள் |
| மொத்த பயனாளிகள் | | 1053 நபர்கள் |

## 2022 முதல் 2023 – பணி ஆண்டில் கூட்டமைப்புகளில் வழியாக உருவாக்கப்பட்ட புதிய குழுக்களின் விவரம்:

| வ.எண் | ஒன்றியம் | பஞ்சாயத்து | கிராமம் | குழுக்கள் | உறுப்பினர் |
|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 4 | 5 | 5 | 60 |
| 2 | திருக்கழுக்குன்றம் | 2 | 2 | 5 | 67 |
| 3 | திருப்போரூர் | 3 | 4 | 6 | 75 |
| 4 | காட்டாங்கொளத்தூர் | 6 | 8 | 10 | 142 |
| 5 | உத்திரமேரூர் | 1 | 1 | 1 | 12 |
| 6 | வாலாஜாபாத் | 2 | 3 | 5 | 60 |
| 7 | சித்தாமூர் | 1 | 1 | 1 | 20 |
| 8 | மதுராந்தகம் | 1 | 1 | 1 | 15 |
| மொத்தம் | | 20 | 25 | 34 | 451 |

# சி.ஆர்.டி.எஸ் பெண்கள் கூட்டமைப்புகளின் அகில உலக பெண்கள் தினவிழா – 2023

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்க வழிகாட்டுதலின் கீழ் செயல்பட்டுவரும் காஞ்சிபுரம் மாவட்ட பெண்கள் மேம்பாட்டுச் சங்கம் மற்றும் செங்கல்பட்டு மதுரம் அன்னை தெரெசா நலச்சங்கம் இணைந்து 08.03.2023 அன்று அச்சிறுப்பாக்கம் மழைமலைமாதா திருத்தலத்தில் **"பாலின சமத்துவத்தில் தொழில்நுட்பங்களும் புதிய கண்டுபிடிப்புகளும்"** என்ற தலைப்பில் அகில உலக பெண்கள் தினவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியின் துவக்கமாக அச்சிறுப்பாக்கம் மேம்பாலத்தின் கீழ் அமைந்துள்ள அறிவர் டாக்டர் அம்பேத்கர் சிலை அருகிலிருந்து 2500 க்கும் மேற்பட்ட பெண்கள் இணைந்து அகில உலக பெண்கள் நாளின் மையக்கருத்தை அடிப்படையாகக் கொண்ட பதாகைகளை ஏந்தி பேரணியாக மழை மலைமாதா அருட்தலத்திற்கு சென்றனர். இந்நிகழ்வை செங்கை மறைமாவட்ட ஆயர் மேதகு. டாக்டர் A.**நீதிநாதன்** அவர்கள் தலைமையேற்று வழிநடத்தினார். இந்நிகழ்வின் சிறப்பு அழைப்பாளர்களாக **திருமதி.ஷர்மிளா ஜான் லூயிஸ்** (சென்னை உயரநீதிமன்ற வழக்கறிஞர்). அருட்பணி. **ஞா.பாக்கிய ரெஜிஸ்** (குரோம்பேட்டை பங்குத்தந்தை). அருட்பணி. **ஆல்பர்ட் தம்பிதுரை** (இயக்குநர் டாசோஸ்). முனைவர்.**ஜான் ஆரோக்கியராஜ்** (காரிதாஸ் இந்தியா மண்டல மேலாளர்). திரு.**கானா பாலா** (திரைப்பட பின்னணி பாடகர்). அருட்பணி.**பெஞ்சமின் நேசமணி** (மீனம்பாக்கம் பங்குத் தந்தை). அருட்பணி. **லியோ எட்வின்** (மழைமலைமாதா திருத்தல அதிபர்) ஆகியோர் கலந்துக்கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். நிறுவன இயக்குநர் முனைவர்.**இ.அந்தோணிராஜ்** அவர்கள் இந்நிகழ்வை சிறப்பாக வழிநடத்தினார். செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட கூட்டமைப்பு பொறுப்பாளர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் என 5000-க்கும் மேற்பட்டவர்கள் கலந்துக்கொண்டு அகில உலக பெண்கள் நாளை சிறப்பித்தனர்.

# அகில உலக பெண்கள் தினவிழா கொண்டாட்டம்

















# அகில உலக பெண்கள் தினவிழா கொண்டாட்டம்

















## தலித் பெண்களுக்கான ஒருநாள் சிறப்பு கருத்தரங்கு:

15.02.2023 அன்று தமிழ்நாடு தலித் பெண்கள் இயக்கம் சார்பில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டங்கள், மனித கழிவுகளை அகற்றும் தொழிலாளர்களுக்கான தடுப்புச் சட்டம், போக்சோ சட்டம் 2012, தலித் பெண்கள் மீதான வன்கொடுமை தடுப்புச் சட்டம், குழந்தைகள் மீதான பாலியல் அத்துமீறல் குறித்த ஒருநாள் கருத்தரங்கு சி.ஆர்.டி.எஸ் அறிவர் அம்பேத்கர் பயிற்சி அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட பிரதிநிதிகள், 10 ஒன்றிய கூட்டமைப்பு பொறுப்பாளர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் என 200 க்கும் மேற்பட்டோர் கலந்துக்கொண்டனர்.





## சி.ஆர்.டி.எஸ் – ன் சிறப்பு செயல்பாடுகள்:

### உலக சுற்றுச்சூழல் தினம்:

08.06.2022 அன்று உத்திரமேரூர் ஒன்றியத்திலுள்ள கம்மாளம்பூண்டி கிராமத்தில் "இயற்கை வளங்களை பேணிக்காப்பதன் வழியாக சுற்றுச்சூழலை பாதுகாத்தல்" எனும் தலைப்பில் உலகை சுற்றுச்சூழல் தினமானது சிறப்பிக்கப்பட்டது. சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தும் விதமாக சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் சார்பில் கம்மாளம்பூண்டி கிராமத்திலுள்ள அரசுப்பள்ளி, அங்கன்வாடி, கோவில் மற்றும் சாலையோரங்களில் 150க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டது. இந்நிகழ்வில் சி.ஆர்.டி.எஸ் நிறுவன இயக்குநர் முனைவர் இ.அந்தோணிராஜ், மக்கள் நலப்பணியாளர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள், சி.ஆர்.டி.எஸ் பணியாளர்கள், கிராம மக்கள் என 300 க்கும் மேற்பட்டோர் கலந்துக்கொண்டனர்.





## கைம்பெண்களுக்கான வருமான பெருக்குத் திட்டம்: தையல் இயந்திரம் வழங்குதல்:

27.06.2022 அன்று செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய 2 மாவட்டங்களில் உள்ள 10 ஒன்றியங்களைச் சேர்ந்த கிராமப்புற ஏழை, எளிய கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்டோர், தாழ்த்தப்பட்ட, வறுமைநிலையில் உள்ள பெண்கள், மாற்றுத்திறனாளி குழந்தைகளின் தாய்மார்கள் ஆகியோர்களுக்கு சுயதொழில் மூலம் வருமானம் பெருக்குதல், பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல் எனும் உயரிய நோக்கில் சி.ஆர்.டி.எஸ் மற்றும் இலயோலா பவுண்டேஷன் இணைந்து வறுமை நிலையில் உள்ள 76 கைம்பெண்களுக்கு வருமான பெருக்குத்திட்டத்திற்காக மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் மற்றும் 51 நபர்களுக்கு விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்விற்கு செங்கை மறைமாவட்ட ஆயர் மேதகு. டாக்டர் A. நீதிநாதன் அவர்கள் வருகைத்தந்து தையல் இயந்திரங்கள் மற்றும் ஆடுகளை ஆசீர்வதித்து பயனாளிகளுக்கு வழங்கினார்.





### கிராமசபை கூட்டங்களில் பங்கேற்றல்:

செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் சி.ஆர்.டி.எஸ் நிறுவன பணித்தளங்களான 10 ஒன்றியங்களில் உள்ள களப்பணியாயர்கள் மக்களின் பங்கேற்புடன் கூடிய கிராமசபை கூட்டங்களில் கலந்துக்கொண்டு பணித்தள கிராமங்களின் அடிப்படைத் தேவைகள் குறித்து தீர்மானங்கள் வழியாக அரசுக்கு தெரிவிக்கப்பட்டு நலத்திட்டங்கள் பெறப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு:

- பழங்குடியின மக்களுக்கான பட்டா
- முதியோர் உதவித்தொகை
- கிராம சாலைகள் அமைத்தல்
- நீர்வளத்தை பாதுகாத்தல்
- பொதுவளங்கள் பயன்பாடு



### கல்லூரி மாணவர்களின் களப்பணி பங்கேற்பு:

சென்னை குரோம்பேட்டை எஸ்.டி.என்.பி வைஷ்ணவா கல்லூரி, சென்னை எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம், படூர் இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, இந்திராகாந்தி தேசிய திறந்தநிலை பல்கலைக்கழகம் போன்ற கல்லூரிகளில் சமூகப்படிப்பு பயிலும் மாணவ, மாணவிகள் சி.ஆர்டி.எஸ் நிறுவனத்திற்கு களப்பணி அனுபவத்திற்காக வந்திருந்து பணியாளர்களுடன் இணைந்து களப்பகுதிகளுக்கு சென்று கிராம மக்களிடையே இயற்கை பாதுகாப்பு, போதை மற்றும் குடிநோய் பிரச்சினைகள், குழந்தைகள் கல்வியின் முக்கியத்துவம், இளைஞர் களின் எதிர்காலத் திட்டங்கள், பெண்களுக்கான விழிப்புணர்வு ஆகிய கருத்துக்களை வீதி நாடகங்கள், விழிப்புணர்வு பிரச்சாரங்கள் வழியாக கிராம மக்களுக்கு எடுத்துரைத்தார்கள்.







## ஏழை, எளியோருக்கான கிறிஸ்துமஸ் பெருவிழா – 2022 :

20.12.2022 அன்று செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கத்தின் சார்பாக ஏழை, எளியவர்களுக்கான கிறிஸ்து பிறப்பு விழா செங்கை மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு.டாக்டர்.A. நீதிநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களின் 10 ஒன்றியங்களிலிருந்து இளம் விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், மாற்றுத்திறனாளிகள், புற்றுநோயால் பாதிக்கப்பட்டோர் மற்றும் வறுமை நிலையில் உள்ளவர்கள் என 500 க்கும் மேற்பட்டோர் கலந்துக்கொண்டு கிறிஸ்து பிறப்பு விழாவிற்கான பரிசு பொருட்களை பெற்று மகிழ்ந்தனர். சி.ஆர்.டி.எஸ் நிறுவன இயக்குநர். முனைவர்.இ.அந்தோணிராஜ் அவர்கள் இந்நிகழ்வை சிறப்பாக வழிநடத்தினார்.

















## சமத்துவ பொங்கல் விழா

சி.ஆர்.டி.எஸ் இயக்குநர் முனைவர்.இ.அந்தோணிராஜ் அவர்களின் தலைமையில் 14.01.2023 அன்று செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஒன்றியம் எடையூர் கிராமத்தில் சி.ஆர்.டி.எஸ்-ன் சமத்துவ பொங்கல் விழாவானது நடைபெற்றது. இவ்விழாவிற்கு மகளிர் குழு உறுப்பினர்கள், கிராம மக்கள், பணியாளர்கள் என 100 க்கும் மேற்பட்டோர் கலந்துக்கொண்டு பொங்கல்வைத்து தமிழர் திருநாள் விழாவை சிறப்பித்தனர். தமிழர் திருநாள் விழாவிற்கு வந்திருந்த மக்களை உற்சாகப்படுத்தும் விதமாக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. எடையூர் கிராமத்திலுள்ள விதவைகள், முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் 50 நபர்களுக்கு புடவை, போர்வை, பொங்கல், கரும்பு அடங்கிய பரிசுபொருட்கள் வழங்கப்பட்டது.

## வெள்ள நிவாரண பணி

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் ஒன்றியத்திலுள்ள உள்ளாவூர் கிராமத்தில் 25 மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டு மேற்கூரை சேதமடைந்த நிலையில் சி.ஆர்.டி.எஸ் நிறுவனம் ஸ்ரீபெரும்பத்தூரில் அமைந்துள்ள பிளெக்ஸ் இந்தியா கம்பெனியுடன் இணைந்து பாதிக்கபட்ட குடும்பங்களுக்கு 25 தார்பாய்கள் வழங்கியது. இந்நிகழ்வில் சி.ஆர்.டி.எஸ் இயக்குநர் மற்றும் பிளெக்ஸ் இந்தியா கம்பெனியின் மனிதவளத்துறை மேலாளர் திருமதி.கிருபா அவர்கள் இணைந்து பாதிப்படைந்த குடும்பங்களை நேரில் சந்தித்து நிவாரண பணிகளை மேற்கொண்டனர்.





















## சி.ஆர்.டி.எஸ் சாலை அமைத்தல்

செங்கல்பட்டு மாவட்டம் திம்மாவரம் ஊராட்சியில் காஞ்சிபுரம் நெடுஞ்சாலையில் செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம் கடந்த 32 ஆண்டுகளாக அரசாங்கத்தின் பதிவுபெற்ற ஒரு சமூகசேவை நிறுவனமாக செங்கல்பட்டு மறைமாவட்டத்தின் கீழ் இயங்கி வருகிறது. பல்வேறு மக்கள் நலப்பணிகள் மற்றும் உரிமை சார்ந்த செயல்பாடுகளை கிராம மக்களிடையே கொண்டு சென்று சமூக சேவையளித்து வரும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்திற்கு வரும் சாலையானது மண்சாலையாகவே இருந்தது குறிப்பிடத்தக்கது. கடந்த 15 ஆண்டுகளாக இச்சாலையை சீரமைக்கவும், புதிய சாலை அமைத்துத்தரவும் கோரி இதுவரை பலமுறை மனுக்கள் அளிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து சி.ஆர்.டி.எஸ் இயக்குநர் முனைவர் இ. அந்தோணிராஜ் அவர்களின் பெருமுயற்சியால் வட்டார வளர்ச்சி அலுவலர், ஒன்றிய கவுன்சிலர் செல்வி.அருள்தேவி மற்றும் ஊராட்சி மன்ற அலுவலகம் மற்றும் கிராமசபையில் மனுக்கள் அளிக்கப்பட்டு தொடர் முயற்சிக்குப்பிறகு கிராமசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கடந்த 05.08.2022 அன்று சி.ஆர்.டி.எஸ் சாலை அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டு அக்டோபர் மாதம் நிறுவனத்திற்கான சிமெண்ட் சாலை அமைத்துத்தரப்பட்டது.

## செங்கல்பட்டு சிஆர்டிஎஸ் சார்பில் 50பேருக்கு ஆடு 50பேருக்கு தையல் மிஷின் உள்ளிட்ட நலத்திட்டம்

செங்கல்பட்டு மே.09:- [illegible]



[illegible]

## கிராமப்புற மேம்பாட்டு சங்கம் கோல்பிங் இந்தியா சார்பில் ஆடு வழங்கும் நிகழ்ச்சி

செங்கல்பட்டு ஏப்ரல் 10:- [illegible]



[illegible]



செங்கல்பட்டு சி.ஆர்டிஎஸ் சமூக சேவை மைய வளாகத்தில் கிறிஸ்துமஸ் விழாவை முன்னிட்டு நலத்திட்டம் வழங்கிய போது எடுத்தபடம்.

## கிறிஸ்துமஸ் விழா: செங்கல்பட்டில் நலத்திட்ட உதவிகள்!

[illegible]



செங்கல்பட்டு பாலூர் அரசு மறுவாழ்வு மைய தொழு நோயாளிகளுக்கு சி.ஆர் சார்பில் நலத்திட்டம் வழங்கிய போது எடுத்தபடம்.

# செய்தி தாள்களில் நமது செயல்பாட்டுப் பதிவுகள்...

## செங்கல்பட்டு அருகே தொழு நோயாளிகளுக்கு நலத்திட்ட உதவி!

[illegible]



...ரசு மறுவாழ்வு மைய தொழு நோயாளிகளுக்கு சிஆர்டிஎஸ் ... போது எடுத்தபடம்.

[illegible]

மாலை முரசு



செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டு சங்கம் சார்பில், உலக மகளிர் தினவிழா அச்சிறுப்பாக்கம் மழைமலைமாதா சர்ச்சில் நடந்தது. அச்சிறுப்பாக்கம் பேருந்து நிலையத்தில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள், கல்வி வளர்ச்சி உள்ளிட்ட விழிப்புணர்வு குறித்த பதாகைகளை கையில் ஏந்தியபடி ஊர்வலமாக சென்றனர்.

தினகரன்
# செங்கல்பட்டு

பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள்




## பெண் கல்வி விழிப்புணர்வு ஊர்வலம்




உலக பெண்கள் தினத்தையொட்டி, அச்சிறுப்பாக்கத்தில் பெண்கள் கல்வி வளர்ச்சி குறித்து விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தி ஊர்வலமாக சென்றனர்.

முரசு

1000 பேருக்கு நலத்திட்ட உதவி



மாலை முரசு
சென்னைப் பதிப்பு



மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவி

## செங்கல்பட்டில்
# விதவைப் பெண்களுக்கு தையல் எந்திரங்கள்!

செங்கல்பட்டு, ஜுன்.28
செங்கல்பட்டு மாவட்டம் திம்மாவரம் பகுதியில் அமைந்துள்ள கிராமப்புற மேம்பாட்டு சங்கம் சார்பில் செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 50 கணவனால் கைவிடப்பட்ட விதவை மற்றும் மாற்றுத்திறனாளி பெண்கள் 50 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மொத்தம் 5 லட்சம் மதிப்பீட்டில் மின்மோட்டார் பொருத்திய தையல் மிஷின் வழங்கும் விழா கிராமப்புற மேம்பாட்டு சங்க இயக்குனர் அருள்தந்தை அந்தோணி ராஜ் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் மறைமாவட்ட ஆயர் நீதிநாதன் சிறப்புவிருந்தினராககலந்து கொண்டு விதவை மற்றும் மாற்றுத்திறனாளி பெண்களுக்கு தையல் மிஷின் மற்றும் கோல்பிங் நிறுவனம் சார்பில் 6 விதவை பெண்களுக்கு தலா 1 லட்சரூபாய் வீதம் 6 லட்சரூபாய் வட்டியில்லாகடன் தொகை வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சி.ஆர்.டி.எஸ் நிர்வாகிகள் வேளாங்கண்ணி, ஜான்சன் உள்பட சி.ஆர்.டி.எஸ் ஊழியர்கள் பலர் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு சி.ஆர்.டி.எஸ் சார்பில் மறைமாவட்ட ஆயர் 50 விதவை மற்றும் மாற்றுத்திறனாளி பெண்களுக்கு ரூ.11 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்டம் வழங்கியபோது எடுத்த படம்.

## செய்தித் தாள்களில் நமது செயல்பாட்டுப் பதிவுகள்......

மாற்றுத் திறனாளி வரைந்த ஓவியத்தை பார்வையிடும்
காரிதாஸ் இந்தியாவின் உதவி இயக்குநர் மற்றும் நமது ஆயர்









சர்வதேச மாற்றுத் திறனாளிகளின் நாளில் காரிதாஸ் இந்தியாவின்
உதவி இயக்குநர் அருட்தந்தை. ஜாலி புத்தன் புறா
மற்றும் சி.பி.ஆர். பணியாளர்கள்



திம்மாவரத்தில் நடைபெற்ற

**காரிதாஸ் இந்தியா நிறுவனத்தின்**
**60ஆம் ஆண்டு வைர விழா**




சி.ஆர்.டி.எஸ். மற்றும் லயன்ஸ்
அரிமா சங்கம் இணைந்து
மாற்றுத்திறனாளிகளுடன்
பொங்கல் விழா
சிறப்பிக்கப்பட்டது.

# செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினர்கள் விவரம்

| வ. எண் | பெயர் | முகவரி | பொறுப்பு |
|---|---|---|---|
| 1 | மேதகு ஆயர்.டாக்டர்.A.நீதிநாதன் | செங்கல்பட்டு மறைமாவட்டம், ஆயர் இல்லம், திம்மாவரம்.செங்கல்பட்டு மாவட்டம் - 603 101 | நிறுவன தலைவர் |
| 2 | பேரருட்பணி. ஜான் போஸ்கோ | செங்கல்பட்டு மறைமாவட்டம், ஆயர் இல்லம், திம்மாவரம்.செங்கல்பட்டு மாவட்டம் - 603 101 | துணை தலைவர் |
| 3 | அருட்பணி.ஜார்ஜ் ஸ்டீபன் | செங்கல்பட்டு மறைமாவட்ட பொருளாளர், ஆயர் இல்லம், திம்மாவரம், செங்கல்பட்டு மாவட்டம் - 603 101 | பொருளாளர் |
| 4 | அருட்பணி.இ.அந்தோணிராஜ் | சி.ஆர்.டி.எஸ் இயக்குநர், செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம், திம்மாவரம், செங்கல்பட்டு - 603 101 | செயலாளர் |
| 5 | அருட்பணி. மரியஅன்பு | பட்டியலினத்தார், பழங்குடியினர் பணியகம், ஆயர் இல்லம், திம்மாவரம், செங்கல்பட்டு மாவட்டம் - 603 101 | உறுப்பினர் |
| 6 | திரு.செல்வராஜ் | ஆர்.என்.கண்டிகை கிராமம், காஞ்சிபுரம் மாவட்டம் | உறுப்பினர் |
| 7 | திரு.பெஞ்சமின் | தந்தை பெரியார் தெரு, புலிப்பாக்கம், செங்கல்பட்டு மாவட்டம் - 603 002 | உறுப்பினர் |
| 8 | அருட்சகோதரி.ரோஸ்காலி | புனித மரியாள் கன்னியர் மடம் செங்கல்பட்டு - 603 101 | உறுப்பினர் |
| 9 | திரு.அந்தோணிதாஸ் | விப்பேடு, மேல்கதிர்பூர் அஞ்சல், காஞ்சிபுரம் மாவட்டம் - 603 502 | உறுப்பினர் |
| 10 | திருமதி.ஸ்டெல்லாமேரி | செல்லியம்மன் தேரடி தெரு, மதுராந்தகம், காஞ்சிபுரம் மாவட்டம் - 603 306 | உறுப்பினர் |
| 11 | திருமதி.கீதா | பாலமுருகன் தெரு, இருங்குன்றபள்ளி,வேண்பாக்கம் அஞ்சல், காஞ்சிபுரம் மாவட்டம் | உறுப்பினர் |

## முடிவுரை:

**எங்களோடு இருந்து எல்லா பணிகளையும் சிறப்புடன் செய்ய எங்களை ஆற்றல்படுத்திய இறைவனுக்கு நன்றி!!**

செங்கல்பட்டு கத்தோலிக்க தலத்திருஅவையின் சமூக கரிசனைக்கான, சமூக நீதிக்கான, சமூக செயல்பாட்டிற்க்கான ஒரு அங்கமாக இருப்பது நமது செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம். கடந்த 33 ஆண்டுகளாக சமூகத்தில் மிகவும் பின்தங்கிய அடித்தட்டு மக்களுக்கும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், இயேசுவின் உரிமை வாழ்வுதரும் பணிகளை செய்துக்கொண்டு வருகின்றது. அதன் அனைத்து செயல்பாடுகளினாலும் ஏராளமான மக்கள் கல்வியிலும், பொருளாதாரத்திலும், சமூகத்திலும் ஆன்மீகத்திலும் உயர்ந்துள்ளனர் விடுதலை வாழ்வை பெற்றுள்ளனர். இறைவனுக்கு நன்றி கூறுகிறோம்.

இந்நிறுவனத்தின் பல்வேறு வளர்ச்சிப்பணிகளில் உறுதுணையாய் இருந்து இந்நிறுவனத்தை வழிநடத்திவரும் நிறுவனத்தலைவர் **மேதகு. ஆயர். டாக்டர். நீதிநாதன்** அவர்களுக்கும், இந்நிறுவனத்தின் துணைத்தலைவராக இருந்து இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை தொடர்ந்து ஊக்குவித்து வரும் **பேரருட்தந்தை. முனைவர். ஜான்போஸ்கோ** அவர்களுக்கும், **பொருளர் அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்**, ஆயரின் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள், பங்கு அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், இலக்கு மக்கள், நன்கொடையாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட, கடைநிலையில் உள்ள மக்களுக்காக சமூக பணியில் அயராது உழைத்துக்கொண்டிருக்கும் எம் நிறுவன பணியாளர்கள் அனைவருக்கும் சி.ஆர்.டி.எஸ் நிறுவனத்தின் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

செங்கல்பட்டு கிராமப்புற மேம்பாட்டுச் சங்கம் இது நமது மறைமாவட்ட நிறுவனம். நமது மக்களுக்கான நிறுவனம். இதன் நிதிநிலை மிகவும் பின்தங்கி இருக்கின்ற நிலையில் அதை பொருளாதாரத்தில் தன்னிறைவு அடையச் செய்வது நமது கடமையாக இருக்கின்றது. எனவே அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், துறவற சபையினர், பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்ற ஆங்கில வழிக்கல்வி பள்ளி தாளாளர்கள் தாராளமாய் உங்கள் நன்கொடைகளை தாருங்கள். உங்கள் பள்ளியில், நிறுவனத்தில் உதவி செய்யும் நல்ல உள்ளங்கள் இருந்தால் எங்களுக்கு அறிமுகம் செய்து வையுங்கள். உங்களுக்கு தெரிந்த உள்நாட்டு, வெளிநாட்டு தன்னார்வத் தொண்டர்கள் அல்லது உபகாரிகளை ஊக்குவியுங்கள். நம் ஆயரோடு இணைந்து ஒன்றுசேர்ந்து, கரம்கோர்த்து இந்நிறுவனத்தை உயர்த்துவோம். பொருளாதாரத்தில் தன்னிறைவு அடைய இணைந்து செயல்படுவோம்.



கடந்த ஐந்து ஆண்டுகளாக நமது நிறுவனத்தின் பொருளாளராக பணியாற்றிய **அருட்பணி. ஜார்ஜ் ஸ்டீபன்** அவர்களுக்கு நமது நிறுவனத்தின் சார்பாக நன்றி கூறுகிறோம்.





நமது நிறுவனத்திற்கு புதிய பொருளாளராக நமது ஆயரால் நியமிக்கப்பட்டிருக்கிற **அருட்பணி. டேமியன் அருளானந்து** அவர்களை அன்போடு வரவேற்கிறோம்!



தஞ்சை தமிழ் பல்கலைக் கழகத்தில் சமூக அறிவியல் துறையில்

*"சமுகவியல் பார்வையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள தலித் கிறித்தவர்களின் கல்வி நிலை - ஓர் ஆய்வு"*

என்னும் தலைப்பில் தமது ஆய்வை மேற்கொண்டு
அதை திறம்பட முடித்து 24.04.2023 அன்று தஞ்சை
தமிழ் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற
13-வது பட்டமளிப்பு விழாவில் தமிழக கல்வி
அமைச்சர் மாண்புமிகு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களின்
முன்னிலையில், தமிழக ஆளுநர். உயர்திரு. R.N. ரவி அவர்களிடமிருந்து
முனைவர் பட்டம் பெற்ற நமது நிறுவன இயக்குநர் தந்தை
முனைவர் இ.அந்தோணிராஜ் அவர்களை

## மனதாரப் பாராட்டுகிறோம்!



தஞ்சை தமிழ் பல்கலைக் கழகத்தில் சமூக அறிவில் துறையில்

*“சமூகவியல் பார்வையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள தலித் கிறித்தவர்களின் கல்வி நிலை - ஓர் ஆய்வு”*

என்னும் தலைப்பில் தமது ஆய்வை மேற்கொண்டு
அதை திறம்பட முடித்து 24.04.2023 அன்று தஞ்சை
தமிழ் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற
13-வது பட்டமளிப்பு விழாவில் தமிழக கல்வி
அமைச்சர் மாண்புமிகு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களின்
முன்னிலையில், தமிழக ஆளுநர். உயர்திரு. R.N. ரவி அவர்களிடமிருந்து
முனைவர் பட்டம் பெற்ற நமது நிறுவன இயக்குநர் தந்தை
முனைவர் இ.அந்தோணிராஜ் அவர்களை

## மனதாரப் பாராட்டுகிறோம்!